விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது


# வலம்புரி
# Valampurii


E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



MoneyGram
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-1771)



சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 12 வியாழக்கிழமை (25.03.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 096


## திருநெல்வேலி சந்தை முடக்கம்

### எழுமாற்றுப் பரிசோதனையில் 24 பேருக்கு கொரோனா உறுதி

*(யாழ்ப்பாணம்)*

திருநெல்வேலி பொதுச்சந்தை தொகுதி மறு அறிவித்தல் வரை மூடப் படுவதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

*(19ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கையை கண்காணிக்கும் ஐ.நாவின் பணி ஆரம்பம்

### சில அதிகாரிகள் மீது பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம்

3ஆம் பக்கம் பார்க்க

## மரம் விழுந்ததில் குடும்பஸ்தர் பலி

### முல்லையில் சம்பவம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு முள்ளிய வளை பூதன் வயல் பகுதியில் மரம் அறுக்

19

## கரணவாய் தெற்கில் கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

கரணவாய் தெற்கு மணிய காரன் தோட்டக் கிணற்றில் இருந்து வயோதிபர் ஒரு வரின் சடலம் மீட் கப்பட்டுள்ளது.

19

## வவுனியாவில் கஞ்சாவுடன் இளைஞன் கைது

(வவுனியா)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் கேரளா கஞ்சா வினை உடைமையில் வைத திருந்த இளைஞர் ஒருவரை வவுனியா பொலிஸார் நேற்று கைது செய்துள்ள னர்.

19

# வடக்கை உலுக்கும் கொரோனா வைரஸ்

## ஒருவர் பலி: 44 பேருக்கு தொற்று உறுதி



- **வவுனியா வைத்தியசாலையில் கொரோனாவால் ஒருவர் உயிரிழப்பு.**
- **எழுமாற்று பரிசோதனையில் திருநெல்வேலி சந்தையில் 24 பேருக்கு தொற்று.**
- **மண்டைதீவுக்கு கடலுணவு வாங்க சென்றவருக்கு கொரோனா உறுதி.**
- **யாழ்.சிறைச்சாலையில் 3 கைதிகளுக்கு கொரோனா.**
- **யாழ்.மருத்துவபீட மாணவனுக்கு கொரோனா**

வடக்கு மாகாணத்தில் மேலும 44 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று புதன் கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் 24 பேர் திரு நெல்வேலி சந்தைத் தொகுதி வியாபாரிகள் என்று வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 284 பேரின் மாதிரிகள் நேற்று பரிசோத னைக்கு உட்படுத்தப் பட்டன.

19

## யாழ்.மாநகர முதல்வர் மணிவண்ணனுக்கு கொரோனா

### முதல்வருடன் தொடர்புபட்டவர்களை அடையாளப்படுத்துமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர முதல்வரும் சட் டத்தரணியுமான மணிவண்ண னுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகி யுள்ளது.

19

## கொரோனா 3ஆம் அலை இலங்கையில் உருவாகும்

### பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் - சிங் கள புதுவருடத்திற்கு பின் கொரோனா 3ஆம் அலை உரு வாகும் என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தற்போது இயல் பாக்கப்பட்டுள்ள பயண

19

### ஐ.நா தீர்மானம் இயற்கை நீதிக்கு முரண்

## வல்லரசுகள் தமிழர்களை பகடையாக பாவிக்கின்றனர்

### சபையில் கஜேந்திரகுமார்

(கொழும்பு)

ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீமானம் இயற்கை நீதிக்கு முரணானது. வல்லரசு நாடுகள் தமிழ் மக்களை பகடையாக பாவிக்கின்றனர் என பாராளுமன்றில் நேற்று உரையாற்

19

## மன்னார் கரிசல் காட்டுப் பகுதியில்

### உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

(மன்னார்)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, கரிசல் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் செவ்

19

### தங்கள் அட்டூழியங்களை மறைக்கவே

## ஐ.நா தீர்மானத்துக்கு 11 நாடுகள் எதிர்ப்பு

### மங்கள சமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

தமது சொந்த எதேச்சாதி காரங்களால் நடந்த அட்டூழியங்களை

19

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்



திருமதி
## விஜயகுமாரி தங்கராசா
(மு / கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலய உப அதிபர்)

**சேவைக்கால விபரம்**

மு / புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம்
26.12.1985 - 30.06.1987

மு / முள்ளிவாய்க்கால் கனிஷ்ட உயர்தர பாடசாலை
01.07.1987 - 15.03.1993

மு / முல்லைத்தீவு மகா வித்தியாலயம்
16.03.1993 - 31.12.1998

மு / இரணைப்பாலை மகா வித்தியாலயம்
01.01.1999 - 30.03.2002

மு / புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி
01.04.2002 - 31.01.2013

மு / கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலயம்
01.02.2013 - 25.03.2021

இன்றைய நாளில் மணிவிழாவை கொண்டாடும் ஆசிரியை சீரும் சிறப்பு பெற்று வாழ வாழ்த்துவதுடன் அவரது சேவையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-1798)

**பாடசாலைச் சமூகம்**
**மு/ விக்கினேஸ்வர வித்தியாலயம்**

# சேவைநலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்



திருமதி
## வசந்தகௌரி விக்கினேஸ்வரன்
(B.A, Dip. in Edu., SLTS -I)
பகுதித் தலைவர்,
யா/ஏழாலை மகா வித்தியாலயம் - ஏழாலை

**சேவை விபரம்**

யா / யூனியன் கல்லூரி
ஆசிரியை - 11.01.1993 - 31.01.1994

யா / குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை
ஆசிரியை - 01.02.1994 - 24.07.1996

யா / வயாவிளான் ம.ம. வித்தியாலயம்
ஆசிரியை - 25.07.1996 - 06.09.2013

யா / வயாவிளான் ம.ம. வித்தியாலயம்
உப அதிபர் - 07.09.2013 - 16.01.2014

யா / ஏழாலை மகா வித்தியாலயம்
பகுதித் தலைவர் -
17.01.2014 - 25.03.2021

எமது பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பாடசாலையின் வளர்ச்சிக்கும் அரும்பணியாற்றி இன்று (25.03.2021) வியாழக்கிழமை ஓய்வு பெறும் **திருமதி வசந்தகௌரி விக்கினேஸ்வரன்** ஆசிரியையின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதோடு மணிவிழா வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

(6326)

வாழ்த்துவோர் :
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/ ஏழாலை மகா வித்தியாலயம்**
**ஏழாலை.**

# மரண அறிவித்தல்



" கிறிஸ்து எனக்கு ஜீவன்
சாவு எனக்கு ஆதாயம் "

## திருமதி நல்லம்மா சிவபாக்கியன்

**மழலையாய் : 28.11.1936 மகிமையாய் : 23.03.2021**

அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா சிவபாக்கியன் நேற்று முன்தினம் (23.03.2021) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா தம்பதியரின் அன்பு மகளும் தம்பு தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவபாக்கியனின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லையா, சரஸ்வதி, மகாலிங்கம், தங்கச்சியம்மா, கனகமணி, சோதிமலர் மற்றும் கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ராணி (ஆசிரியை - சென். ஜோசப் கல்லூரி, திருகோணமலை ), சிவநாதன் (சுகாதார மேற்பார்வையாளர் ) மற்றும் மீரா (ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் - யாழ். வலயம்), சிவமோகன் (கிராம உத்தியோகத்தர்), சியாமா (ஓய்வு பெற்ற ஆசிரியை), யோசுவா சிவயோகன் (போதகர் - நாற்சதுர சுவிசேஷ சபை, நல்லூர், ஓய்வுபெற்ற பொறுப்புத் தாதி உத்தியோகத்தர்), சிவரூபன் (லண்டன்), சிவவாசன் (பிரான்ஸ்), சிவகாந்தன் (லண்டன்), றஜனி (முகாமைத்துவ உத்தியோகத்தர்-பிரதேச செயலகம் - வேலணை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜெகசோதி (சட்டத்தரணி), அன்ரனி றோஸ், காலஞ்சென்ற அருள்நேசன் (முன்னாள் வங்கி உத்தியோகத்தர்), யஸ்ரஸ் (ஓய்வுபெற்ற சுகாதார மேற்பார்வையாளர்), சிஸ்ரர் ஆன் யூலிற் (நாற்சதுர சுவிசேஷ சபை) மற்றும் சசிகலா (லண்டன்), செல்வி (பிரான்ஸ்), ஜான்சிராணி (லண்டன்), றொபேட் பிறேமதாஸ் ஆகியோரின் அன்பு் மாமியாரும் மதன், பிரதீஷ், அமிதாப், சிந்தனா, டெஸ்மன் ரஜீவன், ஆருணியா, நந்திகா, நிருத்திகா, நிதுஷன், ஜெரு டிலக்ஷன், பில்ஷான், தாருண்யா, விதுஷிகா, விரோக்ஷன், எழிலன், நிவேதன், நிதன், மிதா, அன்றூ பிளஸ்சியன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை அவரது இல்லமாகிய இல. 673, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள நாற்சதுர சுவிசேஷ சபையில் காலை 10.30 மணிக்கு நடைபெற்று 11.30 மணியளவில் இருபாலை கானான் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(6321)

இல. 673, பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி.

தகவல்: சிவயோகன் - 077 395 0266, 021 222 6730 குடும்பத்தினர்

# ஐ.நா.பரிந்துரைகளை நிறைவேற்றாவிட்டால் பாரிய ஆபத்து

## எச்சரிக்கிறார் மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர்

(கொழும்பு)

**ஐ.நா.மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் உள்ள பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு காலக்கெடு வழங்கப்படும்.**

அந்தக் காலக்கெடுவுக்குள் அந்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தாத பட்சத்தில் குறித்த தீர்மானம் பாதுகாப்பு சபை வரை செல்லும் என இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் மூத்த சட்டத்தரணியுமான பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்துள்ளார்.

இந்தத் தீர்மானம் பாதுகாப்புச் சபைக்குச் செல்லுமாக இருந்தால், அதன் பின்னர் இலங்கைக்கு பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்தார்.

இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையானது எதிர்காலத்தில் இலங்கைக்கு இருள் சூழ்ந்த நிலைமையை ஏற்படுத்துவதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோன்று, எதிர்வரும் காலங்களில் இலங்கை அரசாங்கம் குறித்த பரிந்துரைகளை நிறைவேற்றாத பட்சத்தில், நாட்டிற்கு எதிராகப் பாதுகாப்புச் சபையின் ஊடாக பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்களும் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

தற்போது காணப்படுகின்ற நிலைமையில், எதிர்வரும் ஆண்டு கூட இலங்கைக்கு சார்பாக தீர்மானமொன்றை கொண்டு வர முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

இந்தத் தீர்மானத்தின் ஊடாக உடனடி தாக்கங்கள் எதுவும் இலங்கைக்கு ஏற்படாது என்றாலும் சுமார் ஒரு வருட காலத்தின் பின்னரே பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெறவுள்ளமையினாலேயே, இந்தியா வாக்களிப்பதிலிருந்து விலகிக் கொண்டது.

பூகோள அரசியலை அடிப்படையாகக் கொண்டே இந்தியா இந்த விடயத்தில் செயற்பட்டுள்ளது.

இந்தியா இந்த தீர்மானத்திற்கு வாக்களித்திருக்கும் பட்சத்தில், அது தமிழகத் தேர்தலைப் பெரிதும் பாதிக்கும் சாத்தியம் காணப்படுவதனாலேயே, இந்தியா வாக்களிப்பதைத் தவிர்த்துக் கொண்டதாகவும் பிரதீபா மஹானாமஹேவா சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

## இன,மத பெயர்களில் கட்சிகளைப் பதிவு செய்ய முடியாது

(கொழும்பு)

சமய மற்றும் இன அடிப்படையில் பெயர் குறிப்பிட்டு எதிர்காலத்தில் அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யாதிருக்கத் தீர்மானித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-4)

## 324 பேர் தொற்றிலிருந்து குணமடைவு

(கொழும்பு)


நாட்டில் மேலும் 324 பேர் கொவிட்-19 தொற்றில் இருந்து குணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் கொவிட் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை 87,630 ஆக உயர்வடைந்துள்ளதாகத் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-4)

# மக்களின் எதிர்ப்பை அடுத்து தொல்லியல் அகழ்வு கைவிடப்பட்டது

(முறிகண்டி)

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் மேற்கொள்ளப்படவிருந்த தொல்லியல் அகழ்வு நடவடிக்கை தற்காலிகமாக கைவிடப்பட்டது.



குறித்த பகுதியில் அமைந்துள்ள உருத்திரீஸ்வரர் ஆலய வளாகத்தில் தொல்லியல் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க நேற்று குறித்த திணைக்கள அதிகாரிகள் வருகை தந்திருந்தனர்.

நேற்று மூன்றாவது நாளாகத் தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குறித்த பணியை மேற்கொள்ள விடாது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கோவில் வளாகத்தின் பிரதான வாயிலை மூடி போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குறித்த நடவடிக்கையை மேற்கொள்ள விடாது தடுத்தனர்.

அதனையடுத்து அகழ்வுப் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4-100-315-316-350)

# கண்காணிக்க களமிறங்கும் ஐ.நா.புலனாய்வாளர்கள்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. அதனையடுத்து இலங்கை தொடர்பாக ஆராய ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம் சட்ட ஆலோசகர்களையும் புலனாய்வாளர்களையும் நியமிக்கவுள்ளது எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலின் முன்னேற்றம் உட்பட இலங்கையில் மனித உரிமைகளின் நிலைமை குறித்த அதன் கண்காணிப்பு மற்றும் அறிக்கையை மேம்படுத்த உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கு இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் அழைப்பு விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து, ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகம், இலங்கையை உன்னிப்பாகக் கண்காணிக்கும் பணியைத் தொடங்கும் என்றும் அதன்படி, இலங்கையில் பணிபுரிய 12 புதிய ஊழியர்களை நியமிக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

அவர்களில் சர்வதேச குற்றவியல் நீதி - குற்றவியல் விசாரணைகள் மற்றும் அணியை ஒருங்கிணைத்து ஒரு தகவல் மற்றும் சான்றுகள் சேகரிக்கும் உத்தியுடைய ஆய்வாளர்கள், இரண்டு புலனாய்வாளர்கள், மனித உரிமை அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பின் ஆதரவு அதிகாரிகள் ஆகியோரை மேற்பார்வையிடுவதற்கான அனுபவமுள்ள சட்ட ஆலோசகர்கள் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# இலங்கை மீதான ஐ.நாவின் கண்காணிப்பிற்கு எப்போதும் உதவத்தயார்-கனடா அறிவிப்பு



(ஒன்றாரியோ)

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை வரவேற்கும் அதேவேளை அங்கு இடம்பெறுவரும் மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு உதவுவதாக கனடா அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ அறிக்கை ஒன்றினை வெளியிட்டு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் குறித்த பிரேரணை இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்த சர்வதேச சமூகத்தின் தொடர்ச்சியான ஆதரவைப் பிரதிபலிக்கிறது எனத் தெரிவித்தார்.

இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான சபை உறுப்பினர்களுடன் இணைந்து கனடா பணியாற்றியது என்றும் மார்க் கார்னியோ சுட்டிக்காட்டினார்.

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டத்தின் மீறல்கள் பற்றிய தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரிக்கவும் ஒருங்கிணைக்கவும் பகுப்பாய்வு செய்யவும் பாதுகாக்கவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தைக் கட்டாயப்படுத்துவதன் மூலம் இலங்கையில் பொறுப்புக்கூறலைப் புதிய தீர்மானம் முன்வைக்கிறது.

ஆகவே எதிர்கால பொறுப்புக்கூறல் செயன்முறைகளுக்கு இந்த ஆணை முக்கியமானதாக இருக்கும் என்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் மார்க் கார்னியோ சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் மனித உரிமைகள் தொடர்பான கடமைகளை நிலைநிறுத்தவும் தண்டனையை முடிவுக்குக்கொண்டு வரவும் ஒரு விரிவான பொறுப்புக்கூறல் செயல்முறையை மேற்கொள்ளவும் கனடா இலங்கையைத் தொடர்ந்து வலியுறுத்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தீர்மானம் இலங்கைக்குப் பாதுகாப்பான, அமைதியான மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு படியாகும் எனச் சுட்டிக்காட்டிய அவர், இந்த இலக்கை நோக்கிச் செல்லும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்க கனடா தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (நி-4)

# முற்றுகைப் போராட்டத்திற்கு மீனவர்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் அமைச்சரின் யாழ்மாவட்ட அலுவலகத்தினை முடக்கி முற்றுகைப் போராட்டத்திற்கு வடக்கு மாகாண மீனவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். அத்துமீறி இலங்கையின் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் உள்நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப் போவதாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இலங்கை, இந்திய மீனவர்களது பிரச்சினைகள் நீண்டகாலமாகப் பேசப்பட்டு வந்தாலும் வாய் மூலமான உறுதி மொழியும் காலத்தினை கடத்தும் செயற்பாடுகளும் தான் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்பட வேண்டும். எங்களது வாழ்வாதாரங்கள் அல்லது வலிகள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும்.


அதன் இறுதியில் முற்றுகைப் போராட்டத்தினை நடத்த ஏற்பாடு செய்துள்ளோம்.

இப் போராட்டத்தினை யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனம், பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், முல்லைத்தீவு மாவட்ட க.தொ.சங்.சமாசம், கிளிநொச்சி மாவட்ட க.தொ.சங்.சமாசம், மன்னார் மாவட்ட க.தொ.சங்.சமாசம் ஆகியோர் இணைந்து நடத்தவுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர். (5-4-104)

# மரண அறிவித்தல்

## தியாகராஜா புவனராஜா

### (Essjey Electricals)



நவாலி தெற்கு, மானிப்பாயை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட தியாகராஜா புவனராஜா நேற்று *(24.03.2021)* புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான தியாகராஜா அன்னலட்சுமி தம்பதி யரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பூபால சிங்கம் - கனகேஸ்வரி தம் பதியரின் அன்பு மருமக னும் சியாமளாவின் அன் புக் கணவரும் பிரவின், கபிசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திராணி, கலாராணி, சோதிராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பாஸ்கரன், ஸ்ரீசாந்திகுமார், இராஜகுமார், சகுந்தலா, பிறேமலா, முருகானந்தன், சிவானந்தன், நிர்மலா ஆகியோரின் மைத்துனரும் சிந்து, தர்ஷனா, ஜனனி, விவேகன், தர்மிலன், வினிஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(25.03.2021)* வியாழக் கிழமை பிற்பகல் 2 மணியளவில் மாரியம்மன் கோயில் வீதி, நவாலி தெற்கு, மானிப்பாயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கொத்துக்கட்டி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(C-1801)

*தகவல்:-*
குடும்பத்தினர்

## தவான், பாண்டியா மிரட்டல்

# இந்தியா அசத்தல் வெற்றி




இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதல் ஒரு நாள் கிரிக்கெட் போட்டி புனே யில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

டொஸ வென்ற இங்கிலாந்து அணி கப்டன் மோர்கன் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

இந்திய அணியின் தவான (98), விராட் கோலி (56), கே.எல்.ராகுல் (62 நொட் அவுட்), குருணால் பாண்டியா (58 நொட் அவுட்) ஆகியோர் அரைச்சதம் அடிக்க இந்தியா 50 ஓவரில் 5 விக்கெட் இழப் பிற்கு 317 ரன்கள் குவித்தது.

பின்னர் 318 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இங் கிலாந்து அணியின் தொடக்க வீரர்களாக ஜேசன் ரோய், பேர்ஸ்டோவ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

இருவரும் இந்திய அணியின் பந்து வீச்சை துவம்சம் செய்தனர். இதனால் ஸ்கோர ஜெட் வேகத்தில் உயர்ந்தது. பேர்ஸ்டோவ் 40 பந்தில் அரைச்சதம் அடித்தார். மறு முனையில் ஜேசன் ரோய் 46 ரன்னில் ஆட்டமிழந்தார்.

ஜேசன் ரோய் - பேர்ஸ்டோவ் ஜோடி முதல் விக் கெட்டுக்கு 14.2 ஓவரில் 135 ரன்கள் குவித்தது. அடுத்து வந்த பென் ஸ்டோக்ஸ் ஒரு ரன்னில் ஏமாற்றம் அடை ந்தார். இந்த இரண்டு விக்கெட்டுகளையும் பிரசித் கிருஷ்ணா வீழ்த்தினார்.

இரண்டு விக்கெட் வீழ்ந்தாலும் மறு முனையில் பேர்ஸ்டோவ் வாண வேடிக்கை நிகழ்த்தினார்.

அதன்பின் இங்கிலாந்து விக்கெட்டுகள் மளமளவென சரிந்தன.

மோர்கன் 22 ரன்னிலும், பட்லர் 2 சாம் பில்லிங்ஸ் 18, மொயீன் அலி 30, சாம் கர்ரன் 12 ஓட்டங்களில் ஆட்டமிழக்க இங்கிலாந்து 42.1 ஓவரில் 251 ரன்கள் எடுத்து ஓல் அவுட் ஆனது.

இதனால் இந்தியா 66 ரன் வித்தி யாசத்தில் அபார வெற்றி பெற்றது. (4)

# மரண அறிவித்தல்



## தம்பிப்பிள்ளை கணேசலிங்கம்

### (உரிமையாளர் -தில்லையம்பலம் கந்தையா ஸ்ரோர்ஸ், T.K.T. Mark நல்லெண்ணெய்)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை கணேசலிங்கம் நேற்று *(24.03.2021)* புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சண்முகநாதன், அன்னலக்சுமி மற்றும் கதிரேசு ஆகியோரின் பெறாமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருஷ்ணவாணி, கணேஸ்வரன், மகேஸ்வரன், தர்மேஸ்வரன், கலைவாணி, தணிஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் விக்னேஸ்வரனின் அன்பு மாமனாரும் கணேஸ்வரி, கமலாம்பிகை, தில்லையம்பலம், கனகாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற ரவீந்திரநாதன் மற்றும் குணரத்தினம், பஞ்சலிங்கம், காலஞ்சென்ற இன்பராணியின் மைத்துனரும் சுதர்சன், சுரேசன், சுதர்சினி, சண்முகப்பிரியா, கிசாந்தி, சுதர்சன், சிவரூபிணி, சிவதாரணி, சிவராகினி, சாருகா, சானுஜன் ஆகியோரின் அன்புத் தாய் மாமனும் செல்வக்கணேஸ், செந்தூரன், செந்தாயினி, செயந்தினி, றஜிதா ஆகியோரின் பெரிய தந்தையும் அஷ்வினி, ஐஸ்வர்யா, அஸ்மிகா ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் சிவசம்பு, கந்தையா ஆகியோரின் மருமகனும் இராசமணியின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(25.03.2021)* வியாழக்கிழமை காலை *11.00* மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஆனைக்கோட்டை கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

(6333)

தகவல்:
குடும்பத்தினர்

# காணி, பொலிஸ் அதிகாரங்களை ஒருபோதும் பகிர்ந்தளிக்க முடியாது

## என்கிறார் விதுர விக்ரமநாயக்க

(கொழும்பு)

**ஒரு தரப்பினரை திருப்திப்படுத்தும் வகையில் காணி, பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என தேசிய மரபுரிமைகள், கலை, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்தார்.**

கொவிட்-19 வைரஸ் தாக்கத்தினால் பொருளாதார மட்டத்தில் பல சவால்கள் தோற்றம் பெற்றுள்ளன. மக்களின் வாழ்க்கை செலவுகளும் அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலையில் மாகாண சபை தேர்தலை நடத்துவது பொருத்தமற்றதாகும்.

மாகாண சபை முறைமை இனப்பிரச்சினைக்கு தீர்வை பெற்றுத் தரும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் பிற்பட்ட காலத்தில் அவை பல முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன.

மாகாண சபை முறைமை வீண் செலவுகளை ஏற்படுத்தும் ஒரு முறைமையாக காணப்படுகிறது என்பதே பெரும்பாலான மக்களின் அபிப்பிராயமாக காணப்படுகிறது.

மாகாண சபை விவகாரத்தில் இந்தியாவின் ஆலோசனைகளை பெற்றுக் கொள்வது அவசியம் என ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் குறிப்பிடுவது முற்றிலும் தவறானதொரு கருத்தாகும்.

நாட்டின் உள்ளக விவகாரங்கள் தொடர்பில் இந்தியாவின் ஆலோசனைகளை பெறுவது அவசியமற்றது.

நாட்டு மக்களின் அபிப்பிராயத்துக்கு அமையவே அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முடியும்.

மாகாண சபை விவகாரத்தில் அரசாங்கம் பொறுப்புடன் செயற் படுவது அவசியமானதாகும். மாகாண சபை தேர்தலை நடத்த அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்துவோம்.

ஒரு தரப்பினரை திருப்திப்படுத்தும் வகையில் காணி, பொலிஸ் அதிகாரங்களை பகிர்ந்தளிக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என விதுர தெரிவித்தார். (நி-4)

# இலங்கை தமிழர்கள் படுகொலைக்கு நீதி பெற்றுத்தரும் நடவடிக்கை வரவேற்கத்தக்கதாகும்- ராமதாஸ்

(சென்னை)

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட போரின் போது தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப் பட்ட போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தி அதில் தெரிய வரும் உண்மைகளை ஆவணப்படுத்துவதற்காக பன்னாட்டுப் பொறிமுறை அமைக்கக் கோரும் தீர்மானம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள் ளது.

இலங்கை தமிழர்கள் படுகொலைக்கு நீதி பெற்றுத் தருவதற்கான இந்த நடவடிக்கை வரவேற்கத்தக்கதாகும்" என பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாஸ் அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கிறார்.

இலங்கைக்கு எதிரான இந்தத் தீர்மானத்தை இந்தியா கண்டிப்பாக ஆதரித்து வாக்களிக்களித்திருக்க வேண்டும்.

ஆனாலும் இலங்கைக்கு ஆதரவான நிலையை எடுக்காமல், இந்தியா நடுநிலை வகித்திருப்பது தமிழர்களிடையே ஆறுதலை ஏற்படுத்தி இருக்கிறது.

இலங்கை போர்க்குற்றங்கள் குறித்து விசாரித்து ஆவணப் படுத்துவதற்காக பன்னாட்டுப் பொறிமுறை அமைக்கப்பட்டிருப்பதன் மூலம் அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் போர்க் குற்றங்கள் குறித்த- புகார்கள் குறித்த அனைத்து ஆதாரங்களும் திரட்டப்பட்டு, ஆவணப்படுத்தப்படும்.

இந்தப் பணிகள் அடுத்த ஒன்றரை ஆண்டுகளில் நிறைவடைய வாய்ப்புகள் உள்ளன. அதன் பின்னர் பன்னாட்டுப் பொறிமுறை ஆவணப்படுத்திய ஆதாரங்களை அடிப்படையாக வைத்து மனித உரிமைகளில் அக்கறை உள்ள எந்த நாடும் பன்னாட்டு குற்றவியல் நீதிமன்றம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளில் வழக்கு தொடர முடியும்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இந்த தீர்மானம் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இலங்கை மீதான போர்க்குற்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணை நடத்தி திரட்டப்படும் ஆதாரங்கள் குறித்து ஆறு மாத ங்களுக்கு ஒரு முறை ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

அது குறித்து விவாதம் நடத்தப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த விவாதங்களில் இந்தியா தவறாமல் கலந்து கொண்டு இலங்கைப் போர்க்குற்றம் தொடர்பான ஆவணங்களை வலுப்படுத்தவும், போர்க்குற்றவாளிகளை கூண்டில் ஏற்றி தண்டிப்பதன் மூலம், கொல்லப்பட்ட ஈழத் தமிழர்களின் குடும்பங்களுக்கு நீதி பெற்றுத்தர இந்தியா உறுதுணையாக இருக்க வேண்டும் என்று மத்திய அரசையும், பிரதமர் நரேந்திர மோடியையும் கேட்டுக்கொள்கிறேன் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)


## ஓராம் ஆண்டு நினைவஞ்சலி



"துர்க்கா துரந்தரர்"
அமரர்
சண்முகராசா செந்தூரன்

பூமியில் 16.03.1970

துர்க்காதேவி பாதங்களில் 05.04.2020

அமரர் "துர்க்கா துரந்தரர்" சண்முகராசா செந்தூரன் சென்ற வருடம் 05.04.2020 அன்று ஆலயத் தொண்டில் ஈடுபட்டு இருந்தபோது அகால மரணமானார் என்ற செய்தி எமது நெஞ்சை உறுத்தியது . மட்டுவில் சைவத்திரு கா.சிவபாலன் அவர்களின் அன்புக்குரியவரும் எமது மதிப்புக்குரிய அமரர் சண்முகராசா செந்தூரன் அவர்களின் ஓராம் ஆண்டு நினைவு தினமான இன்று அவரின் ஆத்மா எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளின் பாதங்களில் சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் சமயத் தொண்டைக் கௌரவித்து 14.02.2021 அன்று கந்தர்மடம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து சமயப் பேரவையின் தலைமையகத்தில் நடைபெற்ற இந்து ஆலயப் பரிபாலன சபையினருடனான கருத்தரங்கில் இந்து சமயப் பேரவையால் "துர்க்கா துரந்தரர்" என்னும் பட்டம் வழங்கப்பட்டதையும் இந்நாளில் நினைவுபடுத்துகின்றோம். காலத்தின் தேவையறிந்து அவருக்கு இப்பட்டத்தை வழங்கிய இந்து சமயப் பேரவை தலைவர், உறுப்பினர்களுக்கு எமது நன்றிகள்.

பெரியம்மா ஆன்மீக அன்னை சிவத்தமிழ் செல்வியின் வழியில் சிறிதேனும் குறைவில்லாமல் சமயத் தொண்டையே குறியாய் கொண்டு வாழ்ந்த குல விளக்கே அறியாமல் அம்பாளும் அழைத்ததேனோ தன்னடியில் அன்னையுடன் நீங்களும் அம்பாளின் பாதங்களில் சாந்தியடைய எல்லாம் வல்ல தெல்லியூர் துர்க்கை அம்பாளை பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

[6313]

ஆயம்
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

இங்ஙனம்
சைவத்திரு.கா.சிவபாலன்
அறக்கட்டளை நிதியம்.

## முதலாம் வருட நினைவலைகள்

தோற்றம் 16 – 03 – 1970



மறைவு 05 – 04 – 2020

"துர்க்கா துரந்தரர்"
அமரர் சண்முகராஜா செந்தூரன் (தூவா)
திதி: பூர்வபக்த துவாதசி 25.03.2021

உயிருள்ளவரை அன்பின் உருவமாய்
எமக்கு உறுதுணையாயிருந்த அன்புத்தூவாவே!
அனைவரையும் அன்புடன் நேசித்து
அகல்விளக்காய் பிரகாசித்த நீ
இன்று அணைந்த விளக்காய் போனதேனோ!
நீ எம்முடன் பக்கபலமாக இருந்து எம்மைப்
பாதுகாப்பது அக் காலனிற்குப் பிடிக்கவில்லையா?
அல்லது அக்காலனை வென்றவனுக்கு பிடிக்கவில்லையா?
எத்தனை காலம் சென்றாலும் உன்
நினைவுகள் எம்மை விட்டு அகலாது
உன் ஆத்மா மோட்சத்திற்கு செல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

(6313)

"தாமரை"
துர்க்காபுரம் ,மல்லாகம்

அண்ணா குடும்பம்(சுதன்)
பபி குடும்பம் ,ரேகு, ஆசையன்ரி

# பாதுகாப்பை உறுதிப்படுத்திய பின் வர்த்தகத்தை மேற்கொள்ளவும்

## யாழ்.வர்த்தக சங்கம்

(யாழ்ப்பாணம்)

தற்போது அதிகரித்து வரும் கொரோனா வைரஸின் தாக்கத்தினை கருத்திற் கொண்டு சுகாதார நடைமுறைகளைப் கடைப்பிடிக்கத் தவறாது பின் பற்றுமாறு யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது.

வர்த்தக நிலையங்களுக்கு வரும் பொதுமக்கள் தங்களின் அவசர தேவைக்காக மட்டும் ஓரிருவர் வந்து பொருட்களைக் கொள்வனவு செய்யுமாறும் வர்த்தக நிலையங்களுக்கு வயது முதிர்ந்தவர்கள், சிறுவர்களை அழைத்து வருவதை தவிர்க்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் பொருட்கள் கொள்வனவிற்காக வரும் பொதுமக்களை வர்த்தக நிலையங்களில் அதிக நேரம் தாமதிப்பதையும் தவிர்ப்பதோடு பொதுமக்களை அதிகளவில் வர்த்தக நிலையங்களில் கூடுவதையும் தவிர்க்கவும்.

வர்த்தக நிலையங்களின் முன்பகுதியில் பொலித்தீன் அல்லது கண்ணாடி போன்ற பாதுகாப்பு அமைப்புக்களை மேற்கொண்டு தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளது. (5-4)

# வீட்டுத் திட்ட நிதியினை

## முழுமையாக வழங்குமாறு கோரி போராட்டம்

(யாழ்ப்பாணம்)

**வீட்டுத்திட்ட நிதியினை முழுமையாக வழங்குமாறு கோரி நேற்று யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**




யாழ்ப்பாணம் - மானிப்பாய் பிரதேச செயலக பிரிவில், ஆனைக்கோட்டை ஜே/132 மற்றும் ஜே/133 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் 2018ஆம் ஆண்டு அப்போதைய அரசினால் 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டதாகவும்,

அதில் இரண்டு கட்டங்களாக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மட்டுமே தற்போது வரை வழங்கப்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்தனர்.

அத்தோடு குறித்த பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் அரசால் வழங்கப்பட்ட அரைகுறை வீட்டில் வசித்து வருவதாகவும் கவலை வெளியிட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் அரச அதிகாரிகளை தொடர்பு கொள்ளும்போது தீர்க்கமான முடிவுகள் எட்டப்படவில்லை எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

குறித்த திட்டத்தினை வழங்கும்போது தாங்கள் வசித்து வந்த தற்காலிக வீடுகளை அழித்து குறித்த புதிய வீட்டுத் திட்டத்தினை மேற்கொண்டதாகவும், தற்போது வசிப்பதற்கு இடமின்றி வெயில் மற்றும் மழைகளில் வசித்து வருவதாகவும் மக்கள் மேலும் தெரிவித்தனர்.

அத்தோடு தமக்கு கிடைக்க வேண்டிய மீதி தொகையை விரைவாகப் பெற்றுத் தருமாறும் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் நேற்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திலும் தமது கோரிக்கை மகஜரினை கையளித்தனர். (5-4-33)


# தள்ளாத வயதிலும் தளராத உழைப்பு

(குப்பிழான்)

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தள்ளாத வயதிலும் உழைத்து உண்ண வேண்டும் என்ற நோக்கில் விவசாயம் செய்து வருகிறார்.

உழைப்பால் கிடைத்த பலனை வேறொருவர் உதவியின்றி கொளுத்தும் வெயிலுக்கு மத்தியில் நேற்றைய தினம் சைக்கிளில் கொண்டு செல்லும் காட்சி. (5-4-18)





2020 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பும் 2021 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள புலமைப் பரிசில் பரீட்சை , கல்விப் பொதுத் தர சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் கடந்த சனிக்கிழமை போக்கறுப்பு கிராம பொது நோக்கு மண்டபத்திலே இடம்பெற்றது. இந் நிகழ்வுக்கான நிதி அனுசரணையை அன்னை அறக்கட்டளை நிலையத்தினர் வழங்கியிருந்தனர்.

(படம்:மகாலிங்கம்)



மீசாலை தெற்கு மதுவன் சனசமூக நிலையத்தின் முப்பதாவது ஆண்டு விழாவை முன்னிட்டு நேற்று புதன்கிழமை இரத்ததானமும் இலவச மருத்துவ முகாமும் இடம்பெற்றன. சனசமூக நிலையத்தாரின் ஏற்பாட்டில் நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்வில் பெருமளவான இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

(படம்: சுபேசன்)

# பிரதிஷ்டை

(குப்பிழான்)

பிரித்தானிய முன்னேற்றச் சங்கத்தின் ஏற்பாட்டில் தவத்திரு யோகர் சுவாமியின் குருபூசை தினமான இன்று வியாழக்கிழமை காலை 6 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் யோகர் சுவாமிகள் திருவுருவ விக்கிரகம் நித்திய வழிபாட்டுக்காகப் பிரதிஷ்டை செய்யப்படும்.(5-4-18)

# அடையாளப்படுத்தவும்

(கரணவாய் )

கரணவாய் மண்டான் பகுதியில் நெல்லியடி பொலிஸார் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது 2 இலட்சம் ரூபா பெறுமதியான நல்லின பசு மாட்டை திருடிக்கொண்டு சென்ற நபர் பொலிஸாரைக் கண்டதும் மாட்டை கைவிட்டு விட்டு தப்பியோடினார்.

நெல்லியடி பொலிஸார் குறித்த பசுமாட்டை பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். பொது மக்கள் பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு அடையாளப்படுத்துமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர். (5-4-60)




# பங்குனி உற்சவம்

(குப்பிழான்)

ஈவினை மதுரையம்பதி ஸ்ரீ மீனாட்சியம்பாள் ஆலய வருடாந்த பங்குனி உற்சவப் பெருவிழா கடந்த 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

இவ்வாலய உற்சவப் பெருவிழாவில் நாளை மறுதினம் 27 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் தேர்த் திருவிழாவும், மறுநாள் பங்குனி உத்தர நன்னாளான ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் நிலாவரை புனித கங்கையில் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (4-5-18)

# ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் நீதவான் நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்ட மணல், கண்டாவளை மணல், கிரவல் மற்றும் கற்கள் என்பன எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

மேலும் ஏலத்தில் வாங்கப்படும் பொருட்களை உடன் பணம் செலுத்திப் பெற்றுக் கொள்வதோடு நீதிமன்ற வளாகத்திலிருந்து அன்றையதினமே அப்புறப்படுத்தல் வேண்டும்.

அத்துடன் ஏலத்தினைக் கோருபவர்கள தமது தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு அல்லது சாரதி அனுமதிப்பத்திரத்துடன் வருகை தர வேண்டும் என மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.(5-4)

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உலகெங்கிலும் வாழும் மக்கள் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக இறை ஆசி வேண்டி விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு சுழிபுரம் பறாளை ஈஸ்வர விநாயகர் (கண்ணைக் கொத்திய காக்காப் பிள்ளையார்) ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசோழியூரான் சி.பிறைசூடி குருக்களின் அருளாசி உரையும் வேத பாராயணமும் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவையில் இடம்பெறும். "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும்.(5-4)

# வாகன டயர் பரிசோதனை தற்காலிகமாக நிறுத்தம்

(கொழும்பு)

தேய்ந்த டயர்களைக்கொண்ட வாகனங்களை அடையாளம் காண தொடங்கப்பட்ட விசேட கண்காணிப்பு நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

உள்ளூர் சந்தைகளில் டயர்களின் பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் காரணமாகவே அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் வாராந்திர அமைச்சரவைக் கூட்ட முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

தேவையான டயர்கள் வியாபார நிலையங்களுக்கு வந்தடைந்ததன் பின்னர் இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அகில இலங்கை சாரதி பயிற்சிப் பாடசாலை உரிமையாளர்களின் தேசிய சங்கமமும் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# நீண்டகாலமாக தாக்கப்பட்டு வந்ததனாலே சிறுமி உயிரிழந்தார்

## பிரேத பரிசோதனை அறிக்கையில் முடிவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - களுவாஞ்சிக்குடி, பெரியகல்லாறு பகுதியில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் உயிரிழந்த 12 வயது சிறுமியின் முழுமையான பிரேத பரிசோதனை அறிக்கை வெளியாகியுள்ளது.

குறித்த சிறுமி நீண்ட காலமாக தாக்கப்பட்டு வந்துள்ளதாகவும் அதனால் காயங்களூடாக கிருமி உடலுக்குள் சென்றதால்உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வறுமையின் காரணமாக தாய் வெளிநாடு சென்ற காரணத்தால், குறித்த சிறுமி தனது தாயின் சகோதரியின் பராமரிப்பிலேயே வளர்ந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது தமிழருக்கு துரோகம் இழைத்துள்ளது இந்தியா

## ஸ்டாலின் கடும் கண்டனம்

(சென்னை)

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவை வாக்கெடுப்பில் பா.ஜ.க.அரசு கலந்துகொள்ளாமையானது உலகத்தமிழர்களுக்கு செய்த பச்சைத் துரோகம் என தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளார்.**

தற்போது தமிழ்நாட்டில் தேர்தல் நடைபெறவுள்ளதால் தான் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது நழுவியது.

இல்லையென்றால் ஆதரவாகவே வாக்களித்திருக்கும், இதனைத் தமிழர்கள் மறக்கவோ மன்னிக்கவோ மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போர்க்குற்ற தீர்மானம் மீதான வாக்கெடுப்பைப் புறக்கணித்த இந்திய மத்திய அரசுக்கு மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கடுமையான கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து ஐ.நா. மனித உரிமை சபையில் கொண்டுவரப்படும் தீர்மானத்தில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும் என நான் வலியுறுத்தியிருந்தேன், வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் நழுவியுள்ளது இந்திய அரசு.

இது ஈழத் தமிழர்களுக்கு இந்திய அரசு செய்த மன்னிக்க முடியாத மாபெரும் துரோகம் எனவும் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 37 1/2 செவ் 2 சூரி 12 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: பொறியியலாளர் PR உண்டு நோர்வே<br>எதிர்பார்ப்பு: நோர்வே மட்டும்<br>தொ.இ: B/11653 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 84 செவ் 11 சூரி 8 இல் உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்: A/L, சித்த மருத்துவம்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி கட்டாயம், அரச, தனியார் உத்தியோகம், உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/11718 |
| பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 57 39 58 செவ் 9 சூரி 10இல்<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்: கட்டட பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகம் பார்க்கும் பெண், பொறியியலாளர், வைத்தியர் அல்லது அதற்கு சமனான பல்கலைக்கழகத்தில் படித்து கொண்டிருப்பவர்களும் எதிர்பார்க்கப்படும் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11654 | பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 79 செவ், சூரி 1 இல் உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: BBA, CIMA Work- சர்வதேச பாடசாலை ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் பொறியியலாளர், உள்நாடு மட்டும்<br>தொ.இ: G/11719 |
| பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 22 3/4 செவ் 8 சூரி 9 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: ஆசிரியர் (அரச)<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் (அரச) உள்நாடு<br>தொ.இ: B/11655 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ், சூரி 10 இல் உயரம்: 156cm<br>தகைமை/தொழில்: O/L<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த மணமகன், விவாகரத்து பெற்று இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர் வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/11722 |
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 24 செவ் 2 சூரி 11 இல் உயரம்: 5.8<br>தகைமை/தொழில்: A/L சொந்த வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: காரைநகர் சொந்த இடமாக கொண்ட பெண், உள் நாடு மட்டும்<br>தொ.இ: B/11656 | பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 10 செவ் 11 சூரி 2 இல்<br>தகைமை/தொழில்: A/L (Londan)<br>எதிர்பார்ப்பு: நன்கு ஆங்கிலம் தெரிந்த பட்டதாரி, வெளிநாடு<br>தொ.இ: G/11724 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# புகைப்பிடித்தலை ஊக்குவித்தமைக்காக விமல் மீது சட்ட நடவடிக்கை

## சட்டமா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

புகைப்பிடிப்பதை ஊக்குவித்தமை தொடர்பாக அமைச்சர் விமல் வீரவன்சவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபர் மற்றும் பொலிஸாரிடம் கோரப்பட்டுள்ளது.

அமைச்சர் வீரவன்ச அண்மையில் ஆயுர்வேதக் கூறுகளுடன் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ள இலவங்கப்பட்டை அடிப்படையிலான சிகரெட்டை உள்ளூர் சந்தையில் அறிமுகப்படுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டார்.

இந்நிலையில் வீரவன்சவால் ஊக்குவிக்கப்பட்ட இலவங்கப்பட்டை அடிப்படையிலான சிகரெட் வகைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய ஆணையகம் எச்சரித்திருந்தது.

சம்பந்தப்பட்ட அரச நிறுவனத்திடம் ஒப்புதல் பெறாமல் சிகரெட்டைச் சந்தைக்குக் கொண்டுவருவது சட்டத்தை மீறும் செயலென குறித்த ஆணையகத்தின் சட்டத் தலைவர் விராஜ் பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலவங்கப்பட்டை அடிப்படையிலான சிகரெட்டுக்கு அனுமதி வழங்கவில்லை என ஆயுர்வேத திணைக்களமும் சுகாதார அமைச்சும் புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய ஆணையகத்துக்கு அறிவித்துள்ளன.

இந்நிலையில் புகைப்பிடிப்பதை ஊக்குவிப்பதற்காக அமைச்சர் விமல் வீரவன்ச மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)




# கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்

## மணவாளக்கோலத் திருவிழா

26.03.2021 நாளை வெள்ளிக்கிழமை. அன்றையதினம் காலை 7.00 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் ஆரம்பமாகி அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகமும் பரிவாரமூர்த்திகளுக்கு விசேட அபிஷேகங்களும் பூசைகளும் திருவூஞ்சலும் இடம்பெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி உலாவந்து அருள்புரிவார்.

அடியார்கள் இந்நிகழ்வில் கலந்து அம்பாளின் அருட்கடாட்சத்தைப் பெற்றுய்யவும்.

பரிபாலன சபையினர்

(6317)

# நெளுக்குளம்- வீரபுரம் வீதியிலும் நிரந்தரமாகும் தற்காலிக சோதனைச் சாவடிகள்

(குருமன்காடு)



கொரோனா காலப்பகுதியில் வவுனியா நெளுக்குளம் - வீரபுரம் பாதையில் உள்ள சூடு வெந்தபுலவு பகுதியில் அமைக்கப்பட்ட தற்காலிக இராணுவ சோதனைச்சாவடி நிரந்தரமாக மாற்றப்பட்டு இராணுவ சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த வருடம் நாட்டில் கொரோனா பரவல் தீவிமடைந்ததையடுத்து நாடளாவிய ரீதியில் ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன்போது மக்களை கண்காணிக்கும் வகையில் வவுனியா மாவட்டத்தின் சூடு வெந்தபுலவு, ஓமந்தை, ஈரப்பெரியகுளம், கனகராயன்குளம் உட்பட பல்வேறு பகுதிகளில் தற்காலிக இராணுவ சோதனைச் சாவடிகள்அமைக்கப்பட்டு.பாதுகாப்புச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.


தற்போது, ஓமந்தை சோதனைச் சாவடி நிரந்தரமாக்கப்பட்டுள்ள நிலையில் நெளுக்குளம் - வீரபுரம் வீதியில் உள்ள சூடுவெந்தபுலவு பகுதியில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக சோதனை சாவடி தற்போது நிரந்தர கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வீதி தடைகள் போடப்பட்டு நிரந்தர சோதனைச் சாவடியாக மாற்றப்பட்டுள்ளது.

குறித்த வீதியில் கரையில் சீமெந்திலான தளம் அமைக்கப்பட்டு அதன்மேல் நிரந்தர கொட்டகைகள் அமைக்கப்பட்டு, சிறிய வீதி கண்காணிப்பு காவலரணும், வீதித்தடைகளும் போடப்பட்டு இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து கடமையில் ஈடுபடுவதுடன், அவ் வீதி வழியாக செல்லும் வாகனங்களை சோதனை செய்து வருகின்றனர். (5-4-250)



வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் நிதி ஒதுக் கீட்டின் கீழ் நாளை 26 ஆம் திகதி மற்றும் நாளை மறுதினம் 27 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய விளையாட்டு விழாவில் மரதன் மற்றும் வேகநடை ஆகிய போட்டிகளில் வடமாகாணத்தை பிரதிநிதிப்படுத்தி பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகளிற்கான ஒரு தொகுதி பாதணிகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. வவுனியா மாவட்ட விளையாட்டு பிரிவு அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண விளையாட்டுத்துறை பணிப்பாளர் எஸ்.எம்.ஆர்.ராஜா ரணசிங்க, வவுனியா மாவட்ட விளையாட்டு அதிகாரி பர்சூக் மற்றும். விளையாட்டு வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். (படம்-சதீஸ்)

# பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகத்தேர்வு



(நெளுக்குளம்)

வவுனியாவில் பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களிற்கான நேர்முகத்தேர்வு வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

நேர்முகத்தேர்வில் 250 ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர். குறித்த நேர்முகத்தேர்வுகள் கொவிட்-19 பரவல் காரணமாக கட்டம் கட்டமாக இடம்பெற்று வரும் நிலையில் புதிய விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி வரையில் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-299)

# மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணின் சங்கிலி அறுப்பு

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பலப் பெருமாள் குளத்தில் வீதியால் தனது கணவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணின் சங்கிலி பின்னால் வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. இச்சம்பவம் அம்பலப் பெருமாள்குளம் தேக்கங் காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் இடம் பெற்றது.

அக்கராயனில் இருந்து அம்பலப்பெருமாள் குளத்தினை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த போதே பின்பக்கமாக வேகமாக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலியினை அறுத்துள்ளனர். சங்கிலி அறுக்கப்படும் போது மோட்டார் சைக்கிளில் சென்ற கணவனும் மனைவியும் விபத்துக்குள்ளாகினர்.சங்கிலி அறுத்தவர்கள் தப்பிச் சென்று விட்டனர். சம்பவம்தொடர்பாக ஐயன்கன்குளம் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது(5-4-350)

# கரியாலைநாகபடுவானில் 561 ஏக்கரில் சிறுபோகம்

(அக்கராயன்)

கிளிநொச்சிபூநகரிகரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ் 561 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான கூட்டம் நேற்று முன்தினம் பூநகரி பிரதேச செயலாளர் ச.கிருஸ்ணேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

561 ஏக்கரில் நெற்செய்கையும் 50 ஏக்கரில் உப உணவுப் பயிர்ச் செய்கையும் மேற்கொள்வது என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக கரியாலை நாகபடுவான் குளம் முழுமையாகப் புனரமைக்கப்படவில்லை எனவும் இக் குளத்தின் கீழான வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாறி வருவதாகவும் இவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு குளத்தின் முழுமையான அபிவிருத்தி, உவர்ப் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் பிரதேச செயலாளரிடம் கோரிக்கை முன்வைத்தனர். (5-4-350)

# ஆற்றுப்படுக்கையில் இடம்பெறும் மணல் அகழ்வை கட்டுப்படுத்தவும்

(அக்கராயன்)

பூநகரி குடமுருட்டி ஆற்றுப்படுக்கையில் தொடர்கின்ற சட்டவிரோத மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்தும்படி குடமுருட்டிக் குளத்தின் கீழான விவசாயிகள் பூநகரி பிரதேச செயலாளர் ச.கிருஸ்ணேந்திரனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். நேற்று முன்தினம் இடம் பெற்ற குடமுருட்டிக் குளத்தின் கீழான சிறுபோக நெற் செய்கைக் கூட்டத்தில் பிரதேச செயலாளரிடம் இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

குடமுருட்டி ஆற்றுப் படுக்கையில் தொடர்ச்சியாக மணல் அகழ்வில் இடம் பெறுவதாகவும் இதன் காரண மாக எதிர்காலத்தில் குட முருட்டிக் குளத்தின் கீழான பயிர்ச் செய்கைகள் பாதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை குடமுருட்டி ஆற்றில் இருந்து டிப்பர்கள் மூலம் மணல் வெளியிடங்களுக்குக் கொண்டு செல லப் படுவதாகவும் தெரிவித் தனர்.

இதன்போது பிரதேச செயலாளர் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு குழு ஒன்று அமைக்குமாறும் அக் குழுவுடன் மணல் அகழ் வினைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடல்கள் நடத்தி மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். (5-4-350)

# முல்லைத்தீவுக்கடலில் இந்திய ரோலர்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்பரப்பில் இந்திய ரோலர்களைக் கட்டுப்படுத்துமாறு கடற்றொழிலாளர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரிடம் நேற்று முன்தினம் நேரில் கோரிக்கை விடுத்துள்ளனர். அண்மைய நாட்களாக 100 இற்கு மேற்பட்ட இந்திய ரோலர்கள் முல்லைத்தீவு கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

இதன் காரணமாக முல்லைத்தீவு கடற் றொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். கடந்த சுமார் பத்தாண்டுகளாக அடிக்கடி இந்திய ரோலர்கள் முல்லைத்தீவு கடலில் தொழில் புரிவதும் மாவட்டச் செயலகம், பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள், பிரதமர், ஜனாதிபதி வரை இத் தகவல் தெரியப்படுத்தப்படுவதும் அதன் பின்னர் இந்திய ரோலர்களின் வருகை குறைவாக இருப்பதும் அடிக்கடி நிகழ்ந்து வருகின்றன.

தற்போது இந்திய ரோலர்களின் வருகை முல்லைத்தீவில் அதிகரித்துள்ளது. இந்திய ரோலர்களின் வருகையினைக் கட்டுப்படுத்துவதற்கு மாவட்டச் செயலாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-4-350)

# இராசிபலன்

25.03.2021
பங்குனி 12, வியாழக்கிழமை,
ஏகாதசி காலை 6.39 மணிவரை,
துவாதசி பின்னிரவு 3.54 மணிவரை,
ஆயிலியம் முன்னிரவு 8.08 மணிவரை,
சுப நேரம் 7.45-9.15 மணிவரை,
இராகுகாலம் 1.45-9.15 மணிவரை,
சந்திராஷ்டம்-பூராடம், உத்தராடம்
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

வளவன்

**மேஷம்** — ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**ரிஷபம்** — உடன் பிறப்புக்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் கூடும்.

**மிதுனம்** — நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக கிடைக்கும் வாய்ப்புண்டு, சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**கடகம்** — பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** — பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், சுபவிரயங்கள் கூடும் நாள்.

**கன்னி** — குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மதியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** — தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உற்சாகமான நாள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு.

**தனுசு** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.

**மகரம்** — அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** — கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மீனம்** — திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பிள்ளைகள் நலனில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

இலட்சியத்தை அடைவதில் நேர்மை வேண்டும்.

# மனித உரிமைகளை மதிப்பதைப் பொறுத்து இலங்கையின் பாதுகாப்பு அமைந்துள்ளது

(வோஷிங்டன்)

இலங்கையின் நீண்டகால பாதுகாப்பும் செழிப்பும் மனித உரிமைகளை மதித்தல் மற்றும் எதிர்காலத்திற்கான அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு உறுதியளிப்பதைப் பொறுத்தது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இன மற்றும் மத சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க அமெரிக்க வெளிவிவகார அமைச்சு இலங்கைக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கான தீர்மானத்தை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் முதன்மை துணை செய்தித் தொடர்பாளர் ஜலினா போர்ட்டர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து தெரிவித்துள்ள அவர் இந்த தீர்மானத்தை அமெரிக்கா இணைந்து வழங்கியது.

சர்வதேச சமூகத்துடன் இணைந்து இன மற்றும் மத சிறுபான்மையினர், மனித உரிமைகள் பாதுகாவலர்கள் மற்றும் சிவில் சமூகத்தவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் அதன் கடந்த காலத்தை நிவர்த்தி செய்ய நம்பகமான மற்றும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்கவும் இலங்கைக்கு அழைப்பு விடுப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானம் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்திற்கான அறிக்கையிடல் தேவைகளை விரிவுபடுத்துவதாகவும் எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கான ஆதாரங்களை சேகரித்து பாதுகாப்பதற்கான ஆணையை உள்ளடக்கியதாகவும் கடந்த ஆண்டு போக்குகள் குறித்த கவலையை வெளிப்படுத்துவதாகவும் ஜலினா போர்ட்டர் தெரிவித்தார். (நி-4)

# இலங்கை தொடர்பான தீர்மானத்தை செயற்படுத்த அதிக நிதி தேவைப்படும்

## ஐ.நா.சபை தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை தொடர்பான தீர்மானத்தை செயற்படுத்த அதிக நிதி தேவைப்படும் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான புதிய தீர்மானத்தை செயற்படுத்த தேவையான நிதி 2021 ஆம் ஆணடுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் இல்லை என ஐக்கிய நாடுகள் சபையின் திட்டமிடல் மற்றும் வரவு-செலவுத் திட்டப் பிரிவு இயக்குநர் ஜோஹனேஸ் ஹூசைமான் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மனித உரிமைகள் பேரவையின் செயலாளர் கோரோ ஒனோஜிமாவுக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த கடிதத்தில் தீர்மானத்தில் தொடர்புடைய விதிகள் 2021 ஆம் ஆண்டிற்கான திட்ட வரவு- செலவுத் திட்டத்தின் கீழ் அல்லது 2022 ஆம் ஆண்டிற்காக முன்மொழியப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் இணைக்கப்படவில்லை என குறிப்பிட்டார்.

அதன்படி வரைவுத் தீர்மானம் A/HRC/46 L.1 க்கு கூடுதலாக 2.8 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தேவைப்படும் உள்ளிட்ட பல செலவுகளை அவர் அதில் சுட்டிக்காட்டினார். (நி-4)


# 6ம் ஆண்டு நினைவஞ்சலியும் 34ம் ஆண்டு பதிவுத் திருமண நாளும்



மண்ணில் 09.10.1961
விண்ணில் 01.04.2015

திருமதி **பாமா விஜயஸ்ரீ**

திதி: வளர்பிறை துவாதசி 25.03.2021
பதிவுத்திருமண நாள்: 25.03.1987

ஆறாண்டுகள் பறந்தாலும்
ஆறாதம்மா எம் துயரம்
முப்பத்து நான்கு ஆண்டுகளின் முன்
இதே நாளில் நீங்கள் மோதிரம்
போட்ட அப்பாவின் விரலில்
இன்று தர்ப்பை பூண வைத்துவிட்டாயே அம்மா!

(6279)

"முருகன் இல்லம்"
55/20, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.
தற்காலிக முகவரி: பாமா மஹால்
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

துயருறும் கணவர் மா.விஜயஸ்ரீ
(ஓய்வு நிலை மின்பொறியியலாளர், இ.மி.ச)
மகன்: வி.கஜானன்



# சிறுவர் அரங்கம்

## கிணற்றுக்குள் வைர மோதிரம்

ஒருநாள் அதிகாலையில், சக்கரவர்த்தி அக்பர், சில அதி காரிகள் புடைசூழ வெளியே உலாவக் கிளம்பினார். பீர்பாலும் அவர் கூடவே சென்றார்.

அக்பர் கோடையின் கொடுமையைப் பற்றிப் பேசிக் கொண்டே வந்தார். அவர்கள் செல்லும் வழியில் ஒரு கிணறு தென்பட்டது.

அதைப் பார்த்த அக்பர், "தலைநகரிலுள்ள கிணறுகள் யாவும் வற்றி விட்டன என்று கேள்விப்பட்டேன். இந்தக் கிணற்றில் தண்ணீர் இருக்கிறதா பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே அதன் அருகில் சென்று குனிந்து பார்த்தார்.

"இது மிகவும் ஆழமான கிணறு. அடியில் தண்ணீர் இருக்கிறதா?, இல்லையா? என்றே தெரியவில்லை" என்று அக்பர் கூறவும், அதைக் கேட்ட பீர்பால், "பிரபு! தண்ணீர் இருக்கிறதா என்று அறிய ஒரு கல்லைத் தூக்கிப் போட்டால் தெரிந்து விடுமே! தண்ணீர் இருந்தால் கல்பட்டு தெளிக்கும்," என்று சொல்லிவிட்டு, கிணற்றினுள் ஒரு கல்லை எறிந்தார்.

கல் அடியில் சென்று விழுந்த ஒலியைக் கேட்டதுமே, கிணறு முற்றிலும் வற்றியுள்ளது என்று தெரிந்தது.




"பீர்பால்! கிணற்றினுள் ஒற்றைக் கல்லாகப் போடக் கூடாதென்று சொல்வார்கள். அதனால் இன்னொரு கல்லை நான் போடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே, தன் விரலில் இருந்த ஒரு வைர மோதிரத்தை அக்பர் கிணற்றினுள் போட, சுற்றியிருந்த அனைவரும் திகைத்துப் போயினர். "பிரபு! வைர மோதிரத்தை ஏன் போட்டீர்கள்?" என்று பீர்பால் கேட்க, "வைரமும் ஒரு கல்தானே! அதனால் தான் போட்டேன்" என்றார் அக்பர்.

"ஆயினும் கல்லெல்லாம் வைரக்கல்லாகுமா? நீங்கள் செய்தது சரியா?" என்று பீர்பால் கேட்டார். "அதனால் என்ன, பீர்பால்! யாரையாவது கிணற்றில் இறங்கச் சொல்லி மோதிரத்தை எடுத்து விட்டால் போகிறது!" என்றார் அக்பர்.

(தொடரும்)

# மகாபாரதம்




**ஜராசந்தன்**

இராஜசூய யாகம் செய்ய சில தகுதிகள் வேண்டும். பிறநாட்டு மன்னர் அந்த மன்னனின் தலைமையை ஏற்கவேண்டும்.

அதனால் கிருஷ்ணன் யுதிஷ்டிரரிடம் "மகத நாட்டு மன்னன் ஜராசந்தன் உன் தலைமையை ஏற்க மாட்டான்.

அவன் ஏற்கனவே 86 நாட்டு அரசர்களை வென்று சிறை ப்படுத்தியிருக்கிறான். மேலும் 14 பேரை சிறைப்படுத்தி அவர்களைக் கொல்வதே அவன் திட்டம். நீ அவனை வென்றால் சக்கரவர்த்தி ஆகலாம் " என்றார்.

மாயாவியான ஜராசந்தனைக் கொல்ல பீமனை அனுப்ப முடிவு செய்யப்பட்டது. இரு வீரர்களும் கடுமையாக மோதினர்.

பீமன் ஜராசந் தனை பனைமட்டையை கிழித்தெறிவதுபோல இரண்டாக கிழித்தெறிந்தான்.

மாயக்காரனான ஜராசந்தன் மீண்டும் உயிர் பெற்று போர் புரிந்தான். பீமன் களைப்புற்று என்ன செய்வது என அறியாது திகைத்தான்.

கண்ணன் ஜராசந்தனை இரண்டாக கிழித்து கால்மாடு தலைமாடாகப் போடுமாறு செய்கை செய்தார்.

பீமனும் அவ்வாறே செய்ய ஜராசந்தன் அழிந்தான்.

சிறையில் இருந்த மன்னர்கள் விடுதலை அடைந்தனர். யுதிஷ்டிரர் மன்னாதி மன்னனாக ஆனான்.

(தொடரும்)

பிருகத்ரதன் என்பான் மகத நாட்டை ஆண்டு வந்தான். இவன் உடன்பிறந்தவர்களான இரு இளவரசிகளை மணந்து இல்லறம் நடத்திவந்த புகழ் பெற்ற அரசன். தனது இருமனைவிகளையும் சமமாகவே பாவித்து நடத்தி வருகிறான். எல்லா வசதிகளும் பெற்று வாழ்ந்து வந்தாலும் அவனுக்குப் பிள்ளையில்லாதது பெருங்குறையாக இருந்தது. காலப்போக்கில் வாழ்வில் வெறுப்புற்ற அவன் காட்டுக்குச் சென்று அங்கே சந்திரகௌசிகர் என்னும் முனிவரை அணுகி அவருக்குப் பணிவிடைகள் செய்து வாழ்ந்திருந்தான்.

பிருகத்ரதனுக்கு பிள்ளையில்லாத குறையை அறிந்த முனிவர் அவன்மீது இரக்கப்பட்டு, மாம்பழம் ஒன்றை அவனிடம் கொடுத்து அதனை அவனுடைய மனைவியிடம் உண்ணக் கொடுக்குமாறு கூறினார்.

# 7 வயது சிறுமியை சுட்டுக் கொன்ற மியன்மார் இராணுவம்

(மியன்மார்)
மியன்மாரின் இரண்டாவது பெரிய நகரமான மாண்டலேயில் பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஏழு வயது சிறுமி யொருவர் உயிரிழந்துள்ளார்.


பெப்பரவரி 1 ஆட்சி கவிழ்ப்புக்கு எதிரான பொது மக்களின் எதிர்ப்பினை ஒடுக்குவதற்காக மியன்மார் இராணுவத்தினர் மேற்கொண்ட இரத்தக்களரி ஒடுக்கு முறையினை இது வெளிப்படுத்திக் காட்டியுள்ளது. (நி-4)

# உலகில் பாதுகாப்பான நகரம் 'டுபாய்' ஆய்வில் தகவல்

(டுபாய்)
டுபாய் பொலிஸ் பொது மக்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாத வகையில் சிறப்புடன் செயற்பட்டு வருவதாக ஆய்வில் தெரியவந்துள்ளது.

உலக வங்கி வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்ள உதவும் நகரங்கள் தொடர்பாக ஆய்வு செய்தது. இந்த ஆய்வின் அடிப்படையில் டுபாய் நகரம் உலகில் பாதுகாப்பான நகரங்களில் ஒன்றாக திகழ்ந்து வருகிறது.

இதுமட்டுமல்லாமல் கொரோனாப் பாதிப்பு சூழ்நிலையை டுபாய் நகரம் கையாண்டு வரும் விதமும் இதற்கு ஒரு காரணமாக திகழ்ந்து வருகிறது. டுபாய் நகரம் தனது சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படுத்த சிறப்பான பல்வேறு முடிவுகளை எடுத்து வருகிறது.




இந்தத் திட்டங்கள் மற்றும் முடிவுகள் காரணமாக உலகின் பல நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்களும் இங்கு முதலீடு செய்ய அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

டுபாய் பொலிஸ் பொது மக்களின் தனிப்பட்ட பாதுகாப்புக்கு எந்தவிதமான பாதிப்பும் இல்லாத வகையில் சிறப்புடன் செயற்பட்டு வருகிறது. மேலும் உட்கட்டமைப்புக்கு இங்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. குறிப்பாக வீதி உள்ளிட்ட போக்குவரத்து வசதிகள் சிறப்புடன் இருக்கிறது.

இத்தகைய பல்வேறு காரணங்கள் டுபாய் நகரம் உலகில் பாதுகாப்பான நகரங்களில் ஒன்றாக திகழ காரணமாக இருந்து வருகிறது. (நி-4)

# தேர்தலில் பெஞ்சமின் நெதன்யாஹூ வெற்றி



(இஸ்ரேல்)
இஸ்ரேலில் நடைபெற்று முடிந்த தேர்தலில் மீண்டும் பிரதமர் பெஞ்சமின் நெதன் யாஹூ வெற்றி பெற்றுள்ளார்.

4ஆவது முறையாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்த தேர்தலில் பிரதமர் நெதன்யாஹூ மீண்டும் ஆட்சியை கைப்பற்றியுள்ளார்.

இதுகுறித்து தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ள நெதன் யாஹூ, தேர்தலில் அமோக வெற்றி பெறச் செய்த இஸ்ரேல் மக்களுக்கு நன்றி எனப் பதிவிட்டுள்ளார்.

மேலும் கட்சி உறுப்பினர்கள் அனைவரிடமும் பேசிய தாகவும் அவர்களிடம் பொறுப்பான நடவடிக்கையை எடுத்து ஒரு நிலையான அரசாங்கத்தை அமைப்போம் எனக் கூறியதாகவும் பதிவிட்டுள்ளார்.

பொருளாதார சீர்கேடு, கொரோனாப் பரவலைக் கையாள்வதில் ஏற்பட்ட சிக்கல் உள்ளிட்ட காரணங்களால் இஸ்ரேல் பிரதமருக்கு கடும் நெருக்கடிகள் ஏற்பட்டன.

அதன் விளைவாக இஸ்ரேலில் கடந்த 2 ஆண்டுகளில் 4 முறை தேர்தல் நடைபெற்றது.அதேநேரம் 5ஆவது முறையாக தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புள்ளதாக மக்கள் அச்சம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# துணை ஆட்சியாளர் காலமானார்


(எமிரேட்ஸ்)
ஐக்கிய அரபு எமிரேட்ஸின் நிதி அமைச்சரும் டுபாயின் துணை ஆட்சியாளருமான ஷேக்ஹம்தான் பின் ரஷீத் அல் மக்தூம் தனது 75 ஆவது வயதில் காலமனார்.(நி-4)

# சுற்றுலாப் பயணிகளை கவர்ந்த எரிமலை பார்வையிட மக்கள் படையெடுப்பு

(ரெய்காவிக்)
ஐஸ்லாந்தின் தலைநகர் ரெய்காவிக் அருகே வெடித்த எரிமலை, தற்போது சுற்றுலா தளமாக மாறி வருகின்றது.

ஃபேக்ரடால்ஸ்ஜால் என்ற எரிமலை வார இறுதியில் வெடித்ததையடுத்து அங்கு ஆயிரக்கணக்கான மக்கள் படையெடுத்த வண்ணம் உள்ளனர். 800 ஆண்டுகளின் பின் எரிமலை வெடித்துள்ளது.

ஆயிரக்கணக்கான நில அதிர்வுகளுடன் வெடித்துள்ள எரிமலையிலிருந்து லாவா எனப்படும் நெருப்புக் குழம்புகள் ஆறாக ஓடி வருகின்றன.



இந்தத் தளத்திற்குள் நுழைய ஆரம்பத்தில் தடை விதிக்கப்பட்டது. ஆனால், தற்போது முதல் மக்கள் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். (நி-4)

# பங்களாதேஷ் பிரதமர் கொலை முயற்சி 14 ஜிகாதிகளுக்கு மரண தண்டனை

(டாக்கா)
பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை கொலை செய்ய முயற்சித்த 14 ஜிகாதிகளுக்கு அந்நாட்டு நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஷேக் ஹசீனாவை இரு தசாப்தங்களுக்கு முன்னர் கொலை செய்ய இவர்கள் முயன்றிருந்தனர்.



2000 ஆம் ஆண்டு இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு தாக்குதல்கள் மூலம் ஹசீனாவை கொலை செய்வதற்கு ஜிகாதிகள் முயற்சித்திருந்தனர்.

அந்த சந்தர்ப்பத்தில் ஷேக் ஹசீனாவின் மத நிலைப்பாடு தொடர்பில் எதிர்ப்பினை வெளிப்படுத்திய அடிப்படைவாதிகளால் இந்த கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்த சந்தர்ப்பத்தில் பங்களாதேஷ் இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளில் 100-இற்கும் மேற்பட்ட அடிப்படைவாதிகள் கைது செய்யப்பட்டதுடன், ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர்.

ஹசீனாவின் மக்கள் பேரணி இடம்பெற்ற பகுதியில் நிலத்தின் கீழ் இரண்டு வெடிகுண்டுகளைப் பொருத்தி கொலை முயற்சி மேற்கொண்ட குழுவிற்கே மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த பயங்கரவாத செயற்பாட்டுடன் தொடர்புடைய சிலருக்கு ஏற்கனவே பங்களாதேஷில் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# நைஜரில் துப்பாக்கிச் சூடு 137 பேர் உயிரிழப்பு



(நைஜர்)
நைஜரில் துப்பாக்கிதாரிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 137 ஆக அதிகரித்துள்ளது.

நைஜரின் தென்மேற்கு பகுதியில் உள்ள பல கிராமங்கள் தாக்குதல்தாரிகளால் சுற்றி வளைக்கப்பட்டு துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற பாரிய வன்முறைச் சம்பவம் இது வென நைஜர் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் தரவறிக்கையின் பிரகாரம், மிகவும் வறுமைக்கோட்டின் கீழுள்ள நாடாக நைஜர் உள்ளடக்கப்பட்டுள்ளது.

நைஜரில் தொடர்ச்சியாக வன்முறை தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-4)

# நீச்சல் அகவை 67 இல் கால்பதிக்கும்
## ஆழிப்பேரலை நாயகன் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி

**25.03.2021**

"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்று"

உலகில் மனிதர்கள் பிறக்கின்றார்கள், இறக்கின்றார்கள் அவ்வளவுதான். மண்டூபம் தவளை இரவோடிரவாக உள றிக்கத்தும் அதிகாலையில் இறந்தும் காக்கைக்கு உணவாக மாறுவதுதான் வரலாறு. இதேபோன்று மனித இனத்திலும் பிறந்து மண்டூபம் தவளையாக கூக்குரலிட்டு இறந்து விடுவது தான் மனிதவரலாறாக மாறிக்கொண்டிருக்கிறது.


ஒரு மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், இறந்தான் என்பது வினாவல்ல. அவன் இறக்கும்போது சமூகத்திற்கு விட்டுச் சென்ற எச்சங்கள் என்ன என்பதே வினாவாகும். இந்தவகையில் எத்தனையோ மனிதர்கள் சமூகத்திற்கு விட்டுச் சென்ற எச்சங்கள் எத்தனை எத்தனை என்பது நாம் ஆராய்வதை விடுத்து அத்தகைய எச்சங்கள் எவற்றை நாம் விட்டுச் செல்லப் போகிறோம் என்பது தான் எங்களை உறுத்த வேண்டியதொரு வினாவாகும்.

இன்றைய உலகில் ஒருவரை ஒருவர் கொப்பி அடித்து சாதனை செய்ய முயற்சிப்பது ஒரு சாதாரண விடயமாகிவிட்டது. ஏதோ மனநிலை பாதிக்கப்பட்டவன் உளறுவது போல ஒருவரை ஒருவர் கிண்டல் பண்ணுவதும் கூத்தாடுவதும் சமூகத்தில் தொடர்கதையாகவே சென்று கொண்டிருக்கிறது.

பறக்கும் விமானத்தை உருவாக்கினார்கள் ரைட் சகோதரர்கள், சந்திர மண்டலத்தில் கால்பதித்தான் நீல்ஸ் ஆம்ஸ்ரோங் பாக்குநீரிணையை நீந்திக் கடந்தான் நவரத்தினசாமி. இவையாவும் 1/2 நூற்றாண்டுக்கு முன்பு நடந்த சம்பவங்கள்.

பாக்கு நீரிணையை நீந்திக்கடந்தவர் நவரத்தினசாமியே. இதற்கு பரிசாக எத்தனையோ விடயங்கள் நடை பெற்றாலும் இன்றும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கும் பிரிட்டிஸ் பேரரசி எலிசபெத் அம்மையாரால் கொழும்பு மாநகரிலே கௌரவிக்கப்பட்டவர் முருகுப்பிள்ளை நவரத்தி சாமி என்பது எதுவித சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட விடயமாகும்.

வல்வெட்டித்துறையிலிருந்து கிட்டத்தட்ட 35 கடல் மைல் தூரத்தை நீந்தி இந்தியக்கரையை அடைந்தவர் நவரட்ண சாமி. இதேநேரம் தலைமன்னாரிலிருந்து கிட்டத்தட்ட 12 கடல்மைல் தூரத்தை நீந்திக்கடந்த வீராங்கனைகளும் இருக்கிறார்கள். மறுப்பதற்கில்லை.



ஆனால் இன்று வரலாறுகள் மாறி பிரசுரிக்கப்படுவது தான் வேதனைக்குரிய விடயமாகும். இத்தகைய வீர வரலாறு இன்றும் குன்றிலிட்ட தீபம் போல ஒளிரும் இச்சூழ்நிலையில் நீச்சல் அகவை 67 இல் கால்பதிக்கும் தொண்டைமானாறு முருகுப்பிள்ளை நவரத்தினசாமி ஈழத்தின் திருச்செந்தூர்க்கரையில் சிலையாக அல்ல சீரானதாக காட்சியளிக்கும் தோற்றத்தை நாம் நினைவு கூர்வதன் மூலம் ஈழத்தமிழினம் மட்டுமல்ல இலங்கை வாழ் மக்கள் எல்லோரும் உயர்வடைகிறார்கள் என்பதே நிறைவான முடிவாகும்.

**இ.சோதிநாதன்**
**(சட்ட ஆய்வாளர்)**

# அரசாங்கத்தை தொடர்ந்து கண்காணிக்க உத்தரவு

(கொழும்பு)

மனித உரிமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை இலங்கை மக்களுக்குக் கிடைத்த பெரும் வெற்றி என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் நிறைவேற்று இயக்குநர் கென்னத் ரோத் டுவிட்டால் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனித உரிமை பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை இலங்கை மக்களுக்கு பெரும் வெற்றி. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை 22 இற்கு 11 என்ற அடிப்படையில் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்களுக்கான எந்த பொறுப்புக்கூறலும் இல்லை என்பதை மனித உரிமை பேரவை அங்கீகரித்துள்ளதுடன் ராஜபக்ஷ அரசாங்கத்தைத் தொடர்ந்தும் கண்காணிக்குமாறு உத்தரவிட்டுள்ளது. (நி-4)

# மேல்மாகாண பாடசாலைகளை
## திறக்க அனுமதி-சுகாதார அமைச்சு ஒப்புதல்

(கொழும்பு)

மேல் மாகாணத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் திறப்பதற்கு சுகாதார அமைச்சகம் கல்வி அமைச்சுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுநோயின் விளைவாக மேற்மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் பெரும்பாலான தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த நிலையிலேயே மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் அனைத்துத் தரங்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க சுகாதார அமைச்சு அனுமதியளித்துள்ளது.


மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் 5,11 மற்றும் 13 தரங்களின் கல்வி நடவடிக்கை கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமாகின.

அதனைத் தொடர்ந்து ஏனைய தரங்களை எதிர்வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு முன்னதாகத் தீமானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2263

**கயூர்ணா**

அருமையான ஓவியம்... உண்மை தானே!



**லோகிதன்**


அப்பாவின் அருமை தெரியனும்னா சொந்தமா சம்பாதிச்சு செலவு செய்யனும்...



அம்மாவின் அருமை தெரியனும்னா சொந்தமா சமைச்சு சாப்பிடனும்...

**தமிழினி**

பஞ்சர்னா...இது பஞ்சர்!



நம்ம டயர்ல ஆணி, கம்பு, கண்ணாடினு வந்து பஞ்சர் பண்ணுதே...!

**நிவி**

சொந்த ஊரில் இருந்து கொண்டு காலையில் வேலைக்கு சென்று...



மாலையில் வீடு திரும்ப வாய்ப்பு கிடைத்தவர்கள் அனைவருமே பாக்கியசாலிகள் தான்...!

**சரவணன்**

சுட்டுவிடும் எனத் தெரிந்தும் சூடாக இருக்கும் ரீயை குடிப்பதில் காட்டும் நிதானம்தான் வாழ்க்கையின் தத்துவம்.



**துலக்சன்**



உணவு, உறவு, உறக்கம் முறையோடும் அளவோடு செல்வமும் இருந்தால் மனநிறைவோடு மகிழ்ச்சியான வாழ்க்கை வாழலாம்...!!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# உணவகமொன்றில் தீ விபத்து ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)


கொழும்பு பஞ்சிகாவத்தை, சங்கராஜா மாவத்தையில் அமைந்துள்ள உணவகமொன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த தீ விபத்தானது நேற்று அதிகாலை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்தில் உணவகத்தின் ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளார். (நி-4)



# குடை சாய்ந்த இயந்திரத்தில் சிக்கி சாரதி ஸ்தலத்தில் உயிரிழப்பு



(கொழும்பு)

கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மண் அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இயந்திரம் குடை சாய்ந்ததில் அதன் சாரதி ஸ்தலத்திலேயே பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

குறித்த பகுதியில் நிர்மானிக்கப்பட்டு வரும் அதிசக்தி வாய்ந்த மின் இணைப்பு பணிக்காக சென்று கொண்டிருக்கும் போது குறித்த மண் அகற்றும் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக தடுப்பு கட்டை (பிறேக்) செயலிழந்துள்ளது.

அதனால் குறித்த இயந்திரம் பின்னோக்கி இழுத்துச் செல்லும் போது வாகனத்தை விட்டு சாரதி பாய்ந்ததாகவும் அவர் பாய்ந்த பக்கத்திலேயே இயந்திரமும் குடை சாய்ந்ததில் அதில் அகப்பட்டே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாகவும் விசாரணையின் மூலம் தெரிய வந்துள்ளது. (நி-4)

# இலக்கத் தகடுகளில் மாகாணங்களை குறிக்கும் ஆங்கில எழுத்து நீக்கம்


## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

வாகன இலக்க தகடுகளில் மாகாணங்களை குறிக்கும் ஆங்கில எழுத்துக்களை நீக்குவதற்கான அமைச்சரவை அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் சுமித் அழககோன் இதனை தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2 மாதங்களுக்குள் குறித்த நடவடிக்கையை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)




# தேங்காய் எண்ணெயின் தரம் பரிசோதிக்கும் செயற்பாடு ஆரம்பம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாக வர்த்தக நிலையங்களில் உள்ள தேங்காய் எண்ணெயை பரிசோதிக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகார சபை தெரிவித்துள்ளது.

இறக்குமதி செய்யப் பட்ட மனித பாவனைக்கு உதவாத தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் இது தொடர்பிலான பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பமாகியதாக நுகர்வோர் நடவடிக்கைகள் தொடர்பான அதிகர சபையின் தவிசாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை இறக்குமதி செய்யப்பட்ட மனித பாவனைக்கு உதவாத தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய்களை மீள் ஏற்றுமதி செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் உணவு பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இல்லத்தரசிகள்

ஒருத்தர் மிகப் பெருமையாகச் சொன்னார். என்னுடைய இல் வாழ்க்கையில் என் மனைவியோடு ஒரே ஒரு தடவை தான் சண்டை வந்திருக்கு என்றார்.எப்பொழுது என்று கேட்டேன்.

கல்யாணத்திற்கு மறுநாள் என்றார். அதன் பின்பு சண்டையே வரவில்லையா? என்றேன். இல்லை என்றார்.அது எப்படி என்றேன்.

அப்பொழுது ஆரம்பித்த அந்த முதல் சண்டையே இன்னும் முடியவில்லை என்றார்.

எனக்குச் சிரிப்பு வந்து விட்டது.

என்னைச் சிரிக்க வைப்பதற்காக அவர் இப்படிச் சொல்கின்றாரே தவிர.. அவர் உண்மையில் இல் வாழ்க்கையை மிகவும் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகின்ற ஒருவர் தான்.ஒரு குடும்பம் நன்றாக இருக்கின்றது என்று சொன்னால் அதற்கு இல்லத்தரசிகள் தான் காரணம்.

இயற்கையாகவே பெண்களுக்கென்று சில சிறப்பான குணங்கள் உண்டு.ஒரு தடவை பவேரிய நாட்டு அதிபருக்கும் ஜேர்மன் சக்கரவர்த்திக்கும் தகராறு வந்தது. ஜேர்மன் சக்கரவர்த்தி என்ன செய்தார் என்றால் ஒரு பெரிய படையைத் திரட்டிக் கொண்டு போய் பவேரியாவின் தலைநகரை வளைத்து விட்டார்.

ஆனாலும் அவருக்குக் கோபம் அடங்கவில்லை. பவேரிய தலைநகரை தரை மட்டமாக்க வேண்டும் என்று தீர்மானித்தார். அந்த சமயத்திலே அவர் மனதிலே ஒரு ஓரமாக கொஞ்சம் இரக்கம் தலை காட்டியது. உடனே ஒரு அறிவிப்பு கொடுத்தார்.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் மட்டும் விதி விலக்கு அளிக்கின்றேன். அவரவர்கள் முதுகிலே சுமக்கக்கூடிய அளவு பொருட்களை எடுத்துக் கொண்டு வெளியேறலாம். என்று அறிவித்தார்.

அதற்குப்பின்பு அவருடைய படைத் தலைவர்களைக் கூப்பிட்டார். பெண்கள் எல்லோரும் தட்டு முட்டுச் சாமான்களோடு ஊரைவிட்டு வெளியேறியவுடனே தலைநகரைக் கொளுத்தி விடுங்கள் என்று உத்தரவு போட்டார்.

கொஞ்ச நேரத்தில் பவேரிய நாட்டுப் பெண்கள் எல்லாம் ஒவ்வொருத்தராக தட்டுத் தடுமாறி வெளியே வந்து கொண்டிருந்தார்கள்.

சக்கரவர்த்தி பார்க்கிறார். அவருக்கு அதிர்ச்சி! என்ன நடந்தது தெரியுமா? பவேரியப் பெண்கள் முதுகிலே சுமந்து வந்தது ... வீட்டுப் பொருட்களையல்ல. வீட்டுக்காரரை! ஆமாம் அவர்கள் தங்களுடைய கணவன்மார்களை முதுகிலே சுமந்து வந்துகொண்டிருந்தார்கள். கடைசியாக பார்த்தால்.. பவேரிய மன்னனை அவருடைய ராணி சுமந்துகொண்டு தள்ளாடி நடந்து வந்துகொண்டிருந்தார்.

ஜேர்மன் சக்கரவர்த்தி இதைப் பார்த்தார்.அவர் மனது நெகிழ்ந்தது. பவேரியாவுக்கு மன்னிப்பு கொடுத்துவிட்டு படைகளை அழைத்துக்கொண்டு திரும்பி வந்துவிட்டார்.

மனைவியின் பெருமை என்பது இதுதான். இருந்தாலும் இந்தக் காலத்தில் எல்லாம் அந்த அளவுக்கு நடக்குமா என்பது சந்தேகம் தான். அது மாதிரி ஒரு நிலைமை இப்போது வந்தால் ... உங்களாலே முடிந்த அளவுக்கு முதுகிலே சுமந்துகொண்டு போங்கள் என்று சொன்னால் .... பல பேர் தொலைக்காட்சிப் பெட்டியை தான் சுமந்து கொண்டு போவார்கள் என்று நான் நினைக்கிறேன்.

அண்மையிலே மெக்சிகோவில் குடும்பத் தலைவிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஒரு போராட்டம் நடத்தினார்களாம்.பேப்பரில் பார்த்தேன்.

அது என்ன போராட்டம் என்றால் ... ஒரு நாள் வீட்டு வேலையை அடியோடு நிறுத்திவிட்டார்களாம்! அவர்களுடைய கணவன்மார்களை சமையல் வேலை உட்பட சகல வேலைகளையும் அன்றைக்கு செய்ய வைத்து அதைப் பார்த்து சந்தோசப்பட்டார்களாம்!

எதற்காக இப்படி செய்தீர்கள்? என்று கேட்டால் வீட்டு வேலை என்பது குடும்பத்திற்கு மட்டுமல்ல.சமுதாயம் முழுவதற்கும் மிகவும் முக்கியமானது என்பதை உணர்த்துவதற்காக தான் இந்தப் போராட்டம் என்று சொன்னார்களாம். மெக்சிகோ நகராட்சியின் பெண்கள் சம உரிமை இயக்கம் தான் இந்த கிளர்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்ததாம். நமது ஊரில் எல்லாம் அந்த அளவுக்கு போராட்டம் அவசியமில்லை. ஏனெனில் ஏற்கெனவே பலர் வீட்டு வேலைகளையெல்லாம் பொறுப்பாகவே செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஒரு அம்மா தன்னுடைய கணவர் பேரில் மிகவும் குறைப்பட்டுக் கொண்டார்கள். ‘‘எப்போது பார்த்தாலும் நீங்கள் என் வீடு.. என் பங்களா... என்னுடைய கார்... என்னுடைய தோட்டம்... இப்படியே தான் சொல்கிறீர்கள்... எதையாவது நம்முடையது என்று சொன்னது ண்டா? ” என்றார்.கணவர் பார்த்தார்.சரி சொல்கிறேன்.... “ நம்முடைய வேட்டி எங்கே.. எடுத்து வா ” என்றார்.

15

# புதிய கலப்பு விகிதாசார தேர்தல் முறைமையும் கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலும் - 2018

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



இதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட உதாரணத்தின் அடிப்படையில்,விகிதாசார முறைமையில் தெரிவு செய்ய வேண்டியுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை (16x2) /3 =10 ஆகும். எனவே மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை (16+10) = 26 ஆகும்.

அட்டவணை-7இன்படி, மேலே குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைக்கு செல்லுபடியான(27938 + 23274+6327) = 57539 வாக்குகள் கிடைத்துள்ளன. இந்த 57 539 வாக்குகளை தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய மொத்த உறுப்பினர்களை 26 ஆல்பிரித்தால் (57539/26) = 2213 என விடை வரும். இது ஒரு உறுப்பினருக்கான சராசரி மதிப்பு வாக்குகளாகும். இந்தத் தீர்க்கமான அளவினால் ஒவ்வொரு அரசியற் கட்சியும், சுயேட்சைக் குழுவும் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகள் பிரிக்கப்படும் பொழுது குறித்த அரசியற் கட்சி அல்லது சுயேட்சைக் குழுவுக்கு உரிய முழு உறுப்பினர் எண்ணிக்கை தீர்மானிக்கப்படுகின்றது.

அதாவது ஒரு உள்ளூராட்சி சபையிலிருந்து தெரிவாகவுள்ள உறுப்பினர் எண்ணிக்கையால் பிரிக்கவரும் ஈவு,ஆரம்பச் சுற்றில் ஒரு உறுப்பினரைப் பெறுவதற்குத் தேவையான் வாக்கு எண்ணிக்கையாகும். மேற்படி ஈவினால் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் பெற்ற வாக்குகளை வகுக்கும் போது கிடைக்கும் ஈவுகளுக்குச் சமனான எண்ணிக்கையில் முதற் சுற்றில் உறுப்பினர்கள் ஒதுக்கப்படுவார்கள்.

முதற் சுற்றின் பின்னர் இன்னும் ஒதுக்குவதற்கு இடங்கள் இருப்பின் முதற் சுற்றில் வகுக்கும் போது கிடைத்த மிச்சங்கள் கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். கூடுதலாக மிச்சம் கிடைத்த கட்சிக்கு மிகுதியாகவுள்ள இடங்களில் முதலாவது இடம் வழங்கப்படும். முற்றாக ஒதுக்கி முடியும் வரை ஏனைய இடங்களும் இவ்வாறே கூடியமிச்சம் உள்ள கட்சிகளுக்கு வழங்கப்படும். இதன்படி கட்சி X க்கு 13 ஆசனங்களும் கட்சி B க்கு 10 ஆசனங்களும், கட்சி Z க்கு 3 ஆசனங்களும் ஒதுக்கப்படும். இதனை அட்டவணை 8 காட்டுகிறது.

இதன்படி விகிதாசார முறைமையில் போட்டியிட்ட கட்சிகளுக்கு எத்தனை உறுப்பினர்கள் கிடைத்துள்ளார்கள் என்பது அறிவிக்கப்படும். அவர்கள் அதன்படி உறுப்பினர்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்க வேண்டும். விகிதாசார வேட்பு மனுப்பட்டியலில் பெயரிடப்பட்டவர்கள் அல்லது வட்டார முறையில் தோற்றவர்கள் கூட நியமிக்கப்படலாம்.

உள்ளூராட்சி அதிகார சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையை அட்டவணை 9 காட்டுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக்குழு பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதசமமாக உரித்தாகியுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடுதலான உறுப்பினர்கள் அக் கட்சியிலிருந்து அல்லது சுயேட்சைக் குழுவிலிருந்து வட்டாரங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ் உள்ளூராட்சி சபையில் தொங்குஆசனம் அல்லது மேன்மிகை ஆசனம் (Over Hang) ஏற்படும்.

## IV.பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்

குறித்த உள்ளூராட்சி அதிகார சபை நிர்வாகப் பிரதேசத்திற்காகப் போட்டியிடும் அனைத்து அரசியற் கட்சிகளும்,சுயேச்சைக் குழுக்களும் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகள் மொத்த வாக்காளர் எண்ணிக்கையின் 20 சதவீதத்திற்கும் குறைவாக இருப்பினும்,கட்சிகளது மூன்று உறுப்பினர்கள் அல்லது அதற்கும் குறைவான உறுப்பினர்கள் பெற்ற வாக்குகள் குறைவாக இருப்பினும் அவற்றைக் கழித்து எஞ்சியுள்ள அதிகப்படியான வாக்குகள் பெற்ற உறுப்பினர்கள் குறித்த உள்ளூர் அதிகாரசபைக்குத் தெரிவு செய்யப்படுவர். (25 சதவீதமான எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை) பிரிக்கப்பட்டு வரும் சராசரி எண்ணிக்கையால் குறித்த கட்சிகள் பெற்ற மொத்தவாக்குகளின் எண்ணிக்கையைப் பிரித்துவரும் எண்ணிக்கையின் அடிப்படையில் பெண் உறுப் பினர்களின் எண்ணிக்கை கணிக்கப்படும்.

அட்டவணை-8 விகிதாசார முறையில் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்கள்

| கட்சியின் பெயர் | பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகள் | சராசரி மதிப்பு | ஆசனக் கணக்கீடு | முதல் சுற்றில் ஆசனம் | மீதி வாக்கு | 2ம் சுற்றில் ஆசனம் | விகிதாசார முறையில் மொத்த ஆசனங்கள் |
|---|---|---|---|---|---|---|---|
| X | 27938 | 2213 | 27938/2213 | 12 | 1382 | 1 | 13 |
| Y | 23274 | 2213 | 23274/2213 | 10 | 1144 | - | 10 |
| Z | 6327 | 2213 | 27938/2213 | 2 | 1901 | 1 | 3 |

அட்டவணை-9 உள்ளூராட்சி அதிகார சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை

| கட்சியின் பெயர் | A | B | C |
|---|---|---|---|
| X | 13 | 13 | 13 |
| Y | 10 | 3 | 10 |
| Z | 3 | - | 3 |

A-பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை. B-வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை. C- உள்ளூராட்சி அதிகார சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை

உதாரணம் -

மேலே குறிப்பிடப்பட்ட A என்னும் உள்ளூராட்சி சபை தொடர்பான தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஒவ்வொரு கட்சியும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் சதவீதமும், உறுப் பினர்களின் எண்ணிக்கையும் பின் வருமாறு அமையும். கட்சி X - பெற்றவாக்குகள் 27938, சதவீதம் 48.55,தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 13,கட்சி Y - பெற்ற வாக்குகள் 23274,சதவீதம் 40.44, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 10, கட்சி Z - பெற்றவாக்குகள் 6327, சதவீதம் 10.99, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 3 ஆகும்.

இதன் பிரகாரம் பெண் உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் போது X,Yஆகிய இரண்டு கட்சிகளும் பெற்றுக் கொண்ட வாக்குகள் மாத்திரமே கணக்கில் எடுக்கப்படும். இதன் அடிப்படையில் X,Y ஆகிய கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகள் வாக்குகளின் கூட்டுத் தொகை (27938+23274), 51 212 ஆகும். தெரிவுசெய்யப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிக்கப்படும் விதம் அட்டவணை -10 காட்டப்பட்டுள்ளது.

அதாவது கட்சி X (தமதுகட்சியில் வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக) குறைந்தது 3 பெண் உறுப்பினர்களையும், கட்சி Y (தமது கட்சியில் வட்டாரத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக) குறைந்தது 2 பெண் உறுப்பினர்களையும் நியமிக்க வேண்டும்.

## தவிசாளர் /துணைத் தவிசாளர் அல்லது முதல்வர் /பிரதி முதல்வர் ஆகியோர் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றனர்?

ஏதேனுமொரு அரசியற் கட்சி அல்லது சுயேட்சைக் குழு குறித்த உள்ளூராட்சி அதிகார சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் நூற்றுக்கு 50 சதவீதமானவற்றில் வெற்றி பெற்றிருந்தால் அவ்வரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேட்சைக் குழுத் தலைவருக்கு இப் பதவி நியமனங்கள் தொடர்பாக தீர்மானிக்க முடியும்.

எந்தவொரு அரசியற் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும் குறித்த உள்ளூராட்சி அதிகார சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் நூற்றுக்கு 50 சதவீதமான எண்ணிக்கை பெறத் தவறியிருந்தால் குறித்த உள்ளூராட்சி அதிகார சபையின் ஆரம்பக் கூட்டத் தொடரின் போது அங்கு சமூகமளித்திருக்கும் உறுப்பினர்களிடையே நடத்தப்படும் வாக்கெடுப்பின் மூலம் மேற்படி நியமனங்கள் செய்யப்படலாம்.

## உறுப்பினர் ஒருவர் இறந்தால் அல்லது கேட்டு விலகினால் அல்லது வேறேதேனும் காரணத்தினால் வெற்றிடம் ஏற்படுமிடத்து, அந்த வெற்றிடத்தை நிரப்புவது எவ்வாறு?

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பழைய தேர்தல் முறையின் பிரகாரம் இடைத் தேர்தல் நடத்தப்பட மாட்டாது என்பதுடன், வெற்றிடத்திற்காக ஒருவரைப் பெயர் குறித்து நியமிக்கும் அதிகாரம் கட்சியின் கட்சிச் செயலாளருக்கு உள்ளது.

(தொடரும்)

# இலங்கைக்கு எதிரான தீர்மானம்

# ஆதரவளித்த நாடுகளுக்கு நன்றி



## பிரித்தானிய பிரதிநிதி


(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாக ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஆதரவளித்த இணைத்தலைமை நாடுகள் குழுவின் ஏனைய நாடுகளுக்கும் ஜெனிவாவிற்கான பிரித்தானியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஜூலியன் ப்ரெய்த்வெய்ட் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது டுவிட்டர் பதிவில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கண்காணிப்பு தொடரும் என்பது முக்கியமானதாகும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## தீபம் ஏற்றுவதன் தத்துவம்

(தொடர்ச்சி)

**தீபங்களும் திரிகளும்!**

பருத்திப் பஞ்சினால் ஆன திரிகள் - நல்லவை அனைத்தும் செய்யும். இலவம் பஞ்சினால் திரிக்கப்பட்ட திரிகள் சகலபாக்கியங்களையும் தரும்.

தாமரைத்தண்டின் நூலால் திரிக்கப்பட்ட திரியானது முன் வினைப் பாவத்தைப் போக்கும். செல்வம் நிலைத்து இருக்கும். வாழைத் தண்டு நாரினால் உருவாக்கப்பட்ட திரியைப் பயன்படுத்துவதால் குழந்தைச் செல்வம் உண்டாகும்.

தெய்வக் குற்றம், குடும்ப சாபம் முதலியவை நீங்கி அமைதி உண்டாகும். குல தெய்வ குறைபாடு நீங்கும். வெள்ளை எருக்கம் பட்டையில் திரித்த திரியால் பெருத்த செல்வம் தரும். பேய் பிடித்தவர்களுக்கு அதன் தொல்லைகள் நீங்கும். விநாயகர் அருள் கிட்டும்.

புதுமஞ்சள் சேலைத் திரி:- அம்மன் அருள் கிட்டும், வியாதிகள் குணமாகும், காற்று, கறுப்புச் சேட்டைகள் நீங்கும்.

சிவப்பு நிற சேலைத் திரி:- திருமணத் தடை நீங்கும், மலட்டுத்தன்மை, செய்வினைத் தோஷங்கள் முதலானவை விலகும்.

பன்னீர் விட்டு காய வைத்த புது வெள்ளைத் துணியினால் திரிக்கப்பட்ட திரியைப் பயன்படுத்துவதால் உத்தமப் பலன்கள் அத்தனையும் கிடைக்கும்.

**தீபத்திற்கு ஆகாத எண்ணெய்!**

கடலை எண்ணெய், பாமாயில், ரீபைண்டு ஆயில், கடுகு எண்ணெய் போன்றவற்றை விளக்கேற்றப் பயன்படுத்தக்கூடாது. இவற்றால் தீமைகளே ஏற்படும்.

**தீபத்திற்கு ஏற்ற எண்ணெய்!**

பசுநெய்:- லட்சுமி வாசம் செய்வாள், புத்திரப் பாக்கியம் கிட்டும்

நல்லெண்ணெய்:- பூஜை தீபத்திற்கு சிறந்தது, சனி பரிகாரம் தரும், லட்சுமி கடாட்சம் உண்டாகும்.

தேங்காய் எண்ணெய்:- லலிதமான தெய்வங்கள் வீட்டில் வாசம் செய்யும், கணவன், மனைவி பாசம் கூடும், பழைய பாவம் போகும்.

இலுப்பை எண்ணெய்:- எல்லாப் பாவங்களும் போகும், மோட்சம் கிட்டும், நல்ல ஞானம் வரும், பிறப்பு அற்றுப் போகும்.

விளக்கெண்ணெய்:- தெய்வ அருள், புகழ், ஜீவன சுகம், உற்றார் சுகம், தாம்பத்திய சுகம் இவைகளை இது விருத்தி செய்யும்.

வேப்ப எண்ணெய்:- குலதெய்வ அருள் கிடைக்கும்.

மூவகை எண்ணெய்:- நெய், வேப்ப எண்ணெய், இலுப்பை எண்ணெய் இந்த மூன்றும் கலந்து தீபமிட செல்வம் உண்டாகும். ஆரோக்கியம் தரும். இறை வழிபாட்டுக்கு மிகவும் உகந்தது.

**தீபம் ஏற்றுவதன் பலன்கள்**

ஒருமுக தீபம்:- சாதாரணமாக வீடுகளில், குத்து விளக்கில் ஒற்றைத் திரியுள்ள தீபம் ஏற்றக்கூடாது.

இருமுக தீபம்:- பிரிந்தவர் கூடுவர், குடும்ப ஒற்றுமை வளரும்.

மூன்று முக தீபம்: புத்திர சுகம் ஏற்படும். குழந்தைகளுக்கு படிப்பில் ஏற்படும் மறதி குறையும்.

நான்முக தீபம்:- பால்பாக்கியம் கிட்டும், பூமியின் அருள் கூடி நிலம் கிடைக்கும்.

ஐந்துமுக தீபம்:- அனைத்து நலன்களுடன் அம்பிகையின் பூரண அருளும் கிட்டும். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 112 இலங்கையர்கள் நாடு கடத்தப்பட்டனர்

(கொழும்பு)

குவைத்திலிருந்து நாடு கடத்தப்பட்ட 112 இலங்கையர்கள் நேற்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நாட்டை வந்தடைந்தனர்.

கொவிட்-19 பரவல் காரணமாகப் பணியாற்றிய வீடுகளில் இருந்து தப்பிச் சென்றிருந்த இலங்கைப் பணியாளர்கள் அந்த நாட்டு பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் தற்போது அவர்கள் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

நாடு திரும்பியவர்கள் வானூர்தி தள குற்றப்புலனாய்வுத் திணைக்கள பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன் பின்னர் தனிமைப்படுத்தலுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளனர். (நி-4)

## செரமிக் உற்பத்திப் பொருட்கள் இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

செரமிக் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் செரமிக் உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தால் தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே தற்போது 6 மாத கடன் அவகாச காலத்தில் செரமிக் பொருட்களை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## பேருந்தின் பின்புற கதவிலிருந்து தவறி வீழ்ந்தவர் மரணம்

(களுத்துறை)

பயணித்துக் கொண்டிருந்த பேருந்தொன்றின் பின்புறக் கதவிலிருந்து தவறி வீழ்ந்து நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் இது தொடர்பாக பேருந்தின் நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளார். பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்வது நடத்துநரின் கடமை என்பதால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (நி-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 140 | 140 | 150 | 150 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 160 | 140 | 120 | 200 |
| தக்காளி | 100 | 70 | 90 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 70 | 50 |
| கோவா | 100 | 80 | 120 | 100 |
| கரட் | 160 | 180 | 290 | 200 |
| பூசணி | 50 | 60 | 150 | 80 |
| புடோல் | 100 | 100 | 80 | 150 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 150 | 140 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 180 | 200 | 250 | 200 |
| வெண்டிக்காய் | 140 | 140 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 120 | 110 | 160 | 140 |
| பயற்றங்காய் | 160 | 200 | 140 | 200 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 100 | 80 | 100 | 120 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 800 | 900 | 800 | 800 |
| போஞ்சி | 180 | 200 | 160 | 240 |
| கத்தரிதம்புள்ள | 100 | 130 | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 30 | 50 |
| தேசிக்காய் | 100 | 150 | 100 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 160 | 150 | 120 | 200 |
| முள்ளங்கி | 50 | 60 | 180 | 60 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | 140 | 100 | 60 | 100 |

# புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் நிலையம் யாழ்.போதனாவில் திறந்து வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

**புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் நிலையம் யாழ். போதனா வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.**

புற்றுநோயியல் தடுப்பு நிகழ்ச்சி திட்டத்தின் தலைவர் திருமதி ஜானகி விதான பத்திரன இதனைத் திறந்து வைத்தார் .

இந்நிலையம் குறித்து யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா கருத்து தெரிவிக்கையில், "உலகளாவிய ரீதியிலும் சரி இலங்கையிலும் சரி இறப்புகளுக்கான காரணமாக இரண்டாவதாக இடம்வகிக்கும்நோயாக புற்றுநோய் காணப்படுகிறது.

எனவே அதனை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து அதனைத் தடுப்பதன் மூலம் இறப்புகளை கட்டுப்படுத்த முடியும் .

புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் சிகிச்சை நிலையம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் முதல் முதலாக புற்றுநோயை முன்கூட்டியே கண்டறியும் நிலையம் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டமையானது வடக்கு மாகாண மக்களுக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

குறித்த நிலையமானது புற்றுநோய் அறிகுறி எதுவும் ஏற்பட முன்னர் ஒரு சாதாரண மனிதருக்கு புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு இருக்கின்றதா? என்பதை பற்றி கண்டறிவதற்கான அல்லது அவ்வாறான நோயாளிகளுக்கு இது வரைக்கும் ஏதாவது புற்றுநோய் ஏற்பட்டுள்ளதா? என்பதை பற்றிய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஒரு நிலையமாகும்.

இந்நிலையம் புற்று நோயாளர்களுக்கான நிலையம் அன்றி புற்றுநோய் ஏற்படுவதற்கு முன்பு கூட்டியே அதனை ஏற்படாமல் தடுப்பதற்கு அல்லது அதன் ஆரம்ப நிலையிலேயே அதனைக் கண்டறிவதற்கான ஒரு நிலையமாக தொழிற்படும்.

இந்நிலையமானது ஒரு வாரத்தில் 7 நாட்களும் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இயங்கும் பொதுமக்கள் தங்களுடைய புற்றுநோய் சம்பந்தமான சந்தேகங்களை குறித்த சிகிச்சை நிலையத்திற்கு வருகை தந்து தெரிவுபடுத்த முடியும்.

கொழும்புக்கு அடுத்ததாக யாழ்ப்பாணத்திலே குறித்த சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் எவ்வித அச்சமுமின்றி எவ்விதத் தயக்கமுமின்றி தமக்குரிய பரிசோதனைகளை குறித்த சிகிச்சை நிலையத்திற்கு வருகை தந்து மேற்கொள்ள முடியும்" எனவும் தெரிவித்தார். (5-4)

# பிறரது வங்கிக்கணக்கிற்குள் ஊடுருவி பண மோசடி

## வவு.இளைஞன் கைது

(நெளுக்குளம்)

பிறரது வங்கிக் கணக்குகளுக்குள் ஊடுருவி பண மோசடியில் ஈடுபட்டதாக குற்றப் புலனாய்வு பிரிவினரால் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

கறுப்புப்பண சுத்திகரிப்பு சட்ட விதிகளுக்கு அமைய இளைஞர் ஒருவர் வவுனியா பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

பிறநபர்களின் வங்கி கணக்குகளுக்குள் ஊடுருவி பண மோசடியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தே குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சந்தேக நபரான இளைஞரை கைது செய்துள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரின் தனியார் வங்கி கணக்கு இலக்கம் ஒன்றுக்கு அமெரிக்காவிலிருந்து ஒரு கோடியே இரண்டு இலட்சத்து 58 ஆயிரத்து 399 ரூபாய் பணம் வைப்பிலிடப் பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்த குற்றப் புலனாய்வு பிரிவினர், சந்தேக நபரான இளைஞர் ஏனைய நபர்களின் வங்கி கணக்குகளுக்கு அத்துமீறி பிரவேசித்தே இந்த பணத் தொகையை பெற்றுக் கொண்டுள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில், கடந்த காலங்களில் இதுபோன்ற மோசடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டதாக 36 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் குற்றப் புலனாய்வு பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர். (5-4-299)

# பனை அபிவிருத்தி சபைக்கு இம்முறை அதிக நிதி

(அக்கராயன்)

பனை அபிவிருத்திச் சபைக்கு வரவு- செலவுத் திட்டத்தில் என்றுமில்லாதவாறு அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை மற்றும் பனை அபிவிருத்திச் சபைக்கு பல்வேறு சலுகைகளை வழங்கியமைக்காக பெருந்தோட்ட அமைச்சர் ரமேஷ் பத்திரனவிற்கு பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிஷாந்த பத்திராஜ் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

2021ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பனை அபிவிருத்திச் சபைக்கு 240 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது போன்ற பெரிய ஒதுக்கீடு பனை அபிவிருத்திச் சபைக்கு இதுவரை கிடைக்கவில்லை. அத்துடன் பனங்கட்டி உற்பத்திக்கு கிலோவிற்கு நூறு ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

அதனைவிட பனை சார் உற்பத்தி கூட்டுறவு அங்கத்தவர்கள் தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவதற்கான விசேட சலுகைகளும் அளிக்கப்பட்டிருப்பதாக மேலும் அவர் தெரிவித்தார். (5-4-350)



இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து 28 வருடங்களின் பின் மீள்குடியேறிய நிலையில் காங்கேசன்துறை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் மாலை நேரக் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் மாணவர்களுக்கான எழுது வெண்பலகை மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அமரர்களான தெய்வரத்தினம் தவமலர் தம்பதியரின் நினைவாக அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: ரவிசாந்)

# முத்தையன்கட்டுக்குளம் கீழ் சிறுபோகம் ஆரம்பம்

(பனிக்கன்குளம்)

முத்தையன்கட்டு குளத்தின் கீழான சிறுபோக விவசாய செய்கைக்கான குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் தலைமையில் முத்தையன்கட்டு நீர்ப்பாசன திணைக்கள அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இக் கூட்டத்தின் 3305 ஏக்கரில் நெற்செய்கையும் 1021 ஏக்கரில் உபஉணவு செய்கையுமாக 4326 ஏக்கரில் செய்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குளத்தின் நீரும் நேற்று முன்தினம் திறந்து விடப்பட்டுள்ளது.

சிறுபோக விதைப்பிற்கான கால எல்லையாக 23.03.2021 தொடக்கம் 23.04.2021 வரை திகதியிடப்பட்டுள்ளது.

குளத்தில் போதியளவு நீர் உள்ளதால் இம்முறை உப உணவு செய்கையிலும் அதிகளவில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-4-281)

# குளத்தினை மீட்க போராட்டம்

## குளத்திற்கான மக்கள் செயலணி அழைப்பு

(நெளுக்குளம்)

வவுனியாக் குளத்தினை பாதுகாக்குமாறு வலியுறுத்தி நாளை வெள்ளிக்கிழமை மாபெரும் சத்தியாக்கிரக போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வவுனியா குளத்திற்கான மக்கள் செயலணி அறிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக நேற்று அவர்கள் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

வவுனியா மாவட்டமானது தனிச்சிறப்பம்சமாக நூற்றுக்கணக்கான குளங்களைத் தன்னகத்தே கொண்டமைந்த ஒரு பிரதேசமாகும்.

இங்கு குடிநீர்த்தேவைக்கான நிலத்தடி நீருக்கும் விவசாய நீர்ப்பாசனத்திற்கும் கால்நடை வளர்ப்பிற்கும் குளங்களே ஆதாரமாக உள்ளன.

இந்த நிலையில் வவுனியாவிலுள்ள பல குளங்களும் விவசாய நிலங்களும் ஆக்கிரமிப்புக்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

குளத்தின் 2000 சதுர மீற்றர் நீரேந்து பகுதி மண் கொட்டி நிரவப்பட்டு "சுற்றுலா மையம்" என்ற பெயரிலான ஒரு வியாபாரஸ்தலமாக மாற்றப்படுவது தொடர்பில் பொது விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு சுவரொட்டி ஒட்டப்பட்டும் துண்டுப்பிரசுங்களும் வழங்கியிருந்தோம்.

இது தொடர்பாக பல்வேறு சமூகம் சார்பான அமைப்புகள் சந்தித்துக் கலந்துரையாடியதன் அடிப்படையில் நாளை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பண்டார வன்னியன் சிலை முன்றலில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் ஒன்றினைச் செய்வதற்குத் தீர்மானித்துள்ளதாக மக்கள் செயலனி அறிவித்துள்ளது.(5-4-299)

காயமொரு சித்திரக் கோயில் – அது கண்ணுதல் பெண்ணுமைவாழ் கோயில் – மாய மெனமதி யாதே – அடா மகத்துவஞ்சொல்ல மதி போதாதே –நற்சிந்தனை

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இலங்கை மீதான தாழமுக்கத்தின் கருக்கட்டல் நடந்தாயிற்று!

இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்குறித்த பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகள் வாக்களித்துள்ளன. 11 நாடுகள் எதிர்த்துள்ளன. 14 நாடுகள் நடுநிலை வகித்துள்ளன.

ஆக, இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக 22 நாடுகள் வாக்களித்துள்ளன என்பது சர்வதேச அரங்கில் ஈழத் தமிழ் மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு கிடைத்த ஆதரவு எனலாம்.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறித்து தாம் கவலையடையப் போவதில்லை என இலங்கை அரசாங்கம் கூறியிருப்பதிலிருந்து இலங்கை அரசாங்கம் மிகுந்த கவலையில் உள்ளதென்பதை உணர முடியும்.

தவிர, ஈழத் தமிழ் மக்களுக்கு இலங்கை ஆட்சியாளர்கள் இழைத்த கொடுமைகளை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருவதுடன் ஈழத் தமிழ் மக்கள் நடத்துகின்ற அகிம்சைப் போராட்டங்களை சர்வதேச சமூகம் அங்கீகரித்துள்ளது என்பதும் இங்கு நிரூபணமாகின்றது.

அதாவது இலங்கைக்கு எதிராக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வரப்படும் தீர்மானத்தை எப்பாடுபட்டாவது தோற்கடிக்க வேண்டும் என்பதில் இலங்கை அரசாங்கம் கடும் பிரயத்தனம் செய்தது.

தமக்கு எதிரான பிரேரணை வெற்றி பெறுமாக இருந்தால், அது சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக்கு மிகப் பெரும் அவமானமாக அமையும் என ஆட்சித் தரப்பால் கருதப்பட்ட நிலையில், தீர்மானம் வெற்றி பெற்றமை இலங்கைக்குப் பெரும்பின்னடைவாகும்.

இதை நாம் கூறும்போது ஐ.நா மனித உரிமைக்ள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஈழத் தமிழ் மக்களின் உரிமையை – அபிலாசைகளை – யுத்தப் பாதிப்புக்கான இழப்பீடுகளை முழுமையாகத் தந்துவிடுமா என்றால், அதுவும் இல்லை.

மாறாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எதிர்காலத்தில் இலங்கையைத் தாக்கப் போகின்ற தாழமுக்கத்தின் கருக்கட்டல் என்பதுதான் இங்கு குறித்துரைக்கப்பட வேண்டிய விடயம்

ஆம், கருக்கட்டியுள்ள தாழமுக்கம் இலங்கையில் சர்வதேச அழுத்த மழையாக – பொருளாதாரத் தடை என்னும் சீரற்ற காலநிலையாக– சம்பந்தப்பட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துகின்ற சூறாவளியாக மாற்றமுறலாம் என்பதுதான் இங்கு அவதானத்துக்குரிய விடயமாகும்.

# பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரங்கள் கொண்ட நாடுகள் இலங்கைக்கு ஆதரவு

## ஐ.நா தீர்மானம் தொடர்பில் அரசாங்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் வீட்டோ அதிகாரங்களைக் கொண்ட பெரும்பான்மையான உறுப்பு நாடுகளின் ஆதரவு இலங்கைக்கு இருப்பதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (புதன் கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறை வேற்றப்பட்ட தீர்மானம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல இதனை தெரிவித்தார்.

குறித்த தீர்மானத்தை அமுல்படுத்த அதிகாரம் இல்லை, ஆனால் தனிப்பட்ட நாடுகள் தொடர்பான முடிவுகளை மட்டுமே எடுக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

அதன்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தை ஐ.நா.பாதுகாப்பு சபையில் சமர்ப்பிக்கலாம். இருப்பினும் அத்தகைய நடவடிக் கையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை நாடாது எனதான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

அவ்வாறு சமர்ப்பித்தால் ஐ.நா. பாதுகாப்பு சபை இலங்கை குறித்து நடவடிக்கை எடுக்கலாம். என்றாலும் பாதுகாப்பு சபையில் உள்ள உறுப்பு நாடுகளின் பெரும்பான்மை ஆதரவு தமக்கு இருப்பதாகவும் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டினார்.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நேற்று முன்தினம் இலங்கை தொடர்பாக கொண்டு வரப் பட்ட ஏ / எச்.ஆர்.சி / 46 / எல் 1 தீர்மானத்திற்கு ஆதரவாக 22 வாக்குகள், அதற்கு எதிராக 11 வாக்குகள் மற்றும் 14 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

# கொரோனாவால் நாட்டுக்கு பேராபத்து! பி.சி.ஆர் பரிசோதனைகளை அதிகரியுங்கள்

## பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில்பி.சீ.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டமையால் நாட்டின் ஆபத்தான நிலையை சரியாக மதிப்பீடு செய்ய முடியாதுள்ளதாக இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது குறித்து சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண கூறியுள்ளார். கொரோனா தொற்றாளர்களைஅடையாளம்காண்பதற்காகக் கடந்த சில மாதங்களாக நாளாந்தம் 20 ஆயிரத் திற்கு மேற்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது .ஆனால், தற்போது 5 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மாத்திரமே மேற்கொள்ளப்படுகிறது. இந்த நாட்களில் நாளாந்தம் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைய இதுவே காரணம்நாட்டின் ஆபத்தான நிலைமையைச் சரியாக மதிப்பிடுவதற்கு பி.சி.ஆர் பரிசோதனைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர்சுட்டிக்காட்டினார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** சமணன்குளம் கிராமம், சாஸ்திரி கூழாங்குளத்திலிருந்து கல்மடு வரை, வீரபுரம் கிராமம் ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** கல்மடுவிலிருந்து கீரிசுட்டான் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)


வயாவிளான் மின்மீன் விளையாட்டுக் கழகம் தனது 68 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு 6 ஓவர் கொண்ட மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது.

முதல் மூன்று இடம் பெறும் அணியினருக்குப் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்படும்.

குறித்த போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 077 625 82 46/077 584 2006/ 076 5517346 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (4)

# சத்திய தரிசனம்



## நல்லதை மட்டுமே காண்போம்


- ❖ வாழ்வு நிரந்தரமானது என்று எண்ணுவது அறியாமை. இதனால் தான் பொன்னையும், பொருளையும் தேடி அலைந்து வாழ்நாளை வீணாக்குகிறோம்.
- ❖ மனம் என்னும் வீட்டில், தூய்மையற்ற சிந்தனை நுழைந்தால், இதயத்திரையில் கறை படிந்து விடும்.
- ❖ நல்ல திசையில் மனதைத் திருப்புங்கள். நல்லதை மட்டுமே எப்போதும் காண முயலுங்கள்.
- ❖ பூமிப்பந்தில் பாதி இருட்டாகவும், பாதி ஒளியாகவும் இருப்பது போல, வாழ்விலும் இன்ப, துன்பம் சரி பாதியாக கலந்திருக்கிறது.
- ❖ வாழ்க்கை என்பது ஒரே திசையில் செல்லும் நீரோட்டம். அதனால், ஒவ்வொரு நாளையும் பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள்.
- ❖ ஜபம், தியானம், பஜனை போன்றவை விலைமதிப்பு மிக்க ரத்தினங்கள். அவற்றின் மூலம் மனதை ஒருமுகப்படுத்தி கடவுளை அடைய முயலுங்கள்.
- ❖ நமக்கு எது தேவையோ அதைத் தர கடவுள் தயாராக இருக்கிறார். ஆனால், அதைப் பெறும் தகுதியை வளர்த்துக் கொள்வது அவசியம்.

# அருளார் அமுதம் வழங்கும் அருட் சிவயோக வள்ளல்

யோகசுவாமிகள் செல்லப்பதேசிகர் அருளால் சிவபோகத்தில் பொருந்திய இடம் நல்லூர்த் தேரடி. அவர் அரை நூற்றாண்டு காலமாக உறைந்து சிவ தொண்டு புரிந்த இடம் கொழும்புத் துறை ஆச்சிரமம். தமது சாந்நித்தியம் என்றும் நின்று நிலவும் வண்ணமாய்க் கோவில் கொண்டருளும் இடம் சிவதொண்டன் நிலையம்.

செல்லப்பமூர்த்தம் ஒரு சிவமூர்த்தமே. யோகசுவாமிகள் இம்மூர்த்தத்தை மூவர்களும் ஒன்றாகச் சேர்ந்த நல்ல மூர்த்தம் எனப் போற்றுவர். இக் குருமூர்த்தம் யோகசுவாமிகளைத் தம்மோடு கூடக் குடியிருத்தி ஞானவித்தையின் நுட்பங்களையெல்லாம் ஒன்றும் ஒழியாமற் போதித்து, அப்போதனை நிறைவுற்றபின் ஒருநாள் யோக சுவாமிகளை உவகை பூத்த முகத்துடன் உற்றுநோக்கி ஒருபொல்லாப்புமில்லை என்று அருவமும் காட்டி, உருவமும் காட்டி, அப்பாற்கப்பாலாம் அருள்நிலை காட்டிக்காட்டி, அந்தம் ஆதியில்லாச் சொரூபமும் காட்டிச் சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டி விட்டார். அந்த நன்மோன நிறைவில் மாட்டுப் பட்டுக் கிடக்கும் நிலையினின்றும் பின் கணமேனும் சுவாமி பிரிந்திருந்ததில்லை .அவர் சந்ததமும் மோனநிலை தவறாத ஞானநிட்டர். அவர் செல்லப்பரைப் போற்றிச் சொன்ன "ஆறாறு தத்துவத்துக்கப்பாலே உள்ளவன், மாறாக்கருணையன், மருமத்தில் மருமமாயிருப்பான், மாதவருமறியாத மகத்தான்" என்னும் மொழிகள் அவருக்கும் பொருந்துவதே. (இத்தகைய மகத்தான ஞானகுரவனை சித்து மயக்கத்தில் அகப்பட்ட கூட்டத்துள் ஒருவராக வைத்துக் கிளிப்பிள்ளை போலச் சொல்லிவருவது அழகன்று.)

ஆசான் அருளால் ஆசானான யோகசுவாமிகளது திருவுள்ளத்திலே ஆசான் தமக்கு ஈந்த அனுபவ சித்தாந்தத்தை உலகறிய விளக்கம் செய்ய வேண்டுமென்ற திருக்குறிப்புத் தோன்றியதும் கொழும்புத்துறைக் கொட்டிலிற் போயமர்ந்தார். தக்கவர்களைத் தேடி யாழ்ப்பாணத்துச் சந்தி தெருக்கள், சந்தை கடைகளெங்கும் திரிந்தார். நம்மவர் உத்தியோகம் புரிந்த கொழும்



சிவயோக சுவாமிகளது 57ஆவது குரு பூசை இன்றைய தினம் (25.03.2021) யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தில் அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு சிவதொண்டன் சபையால் அனுப்பிவைக்கப்பட்ட இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

புப்பட்டினம், கண்டி, மலைநாடெல்லாம் மாதம் ஒருமுறை சுற்றி வந்தார். ஒரு ஞானிக்கும் ஞானநாட்டமுடையோர்க்குமான சம்பந்தம் மலருக்கும் மதுவண்டுக்கும் உள்ளதும், பழமரத்துக்கும் வௌவாலுக்கும் உள்ளதும் போன்ற சம்பந்தமெனவே தோன்றுகின்றது.

சுவாமிகளை ஒரு பெரும் திருக் கூட்டம் சூழ்ந்தது. அத்திருக்கூட்டத்தில் சித்தாந்தசாத்திர நூல்களைச் சிந்தித்துச் சிந்தித்து சோதியாய்ப் பரிணமித்த திருவிளங்கதேசிகர் ஆதிய தீவிர தரபக்குவர்கள் இருந்தனர். திருவடியின் பத்தைக் குறியாய்க் கொண்டு சுவாமிகளின் பின்னே முன்பின் நாடாது செல்ல வல்ல மார்க்கண்டு சுவாமிகள், செல்லத்துரைசுவாமிகள் முதலான உத்தமச் சீடர்கள் இருந்தனர். பிரம்மஸ்ரீ கணேசய்யர், சோமசுந்தரப்புலவர் ஆகிய இருமொழிக்கடல்களும் பழுத்த தமிழ்ப் புலவர்களும் இருந்தனர். சேர். பொன். இராமநாதன் போன்ற நாட்டுத் தலைவர்கள் கொழும்புத்துறை ஆச்சிரமத்திற்கு வந்து திருக்கதவம் திறக்கும் தருணம் பார்த்துக் கிடுகிடென்ற நடுக்கத்துடன் நின்றனர். எஸ்.டபிள்யூ. ஆர். டி.பண்டாறநாயக்க தகதா மாளிகைக்குச் செல்வது போன்ற பக்குவத்துடன் கொழும்புத்துறைக் கொட்டிலுட் புகுந்து சுவாமிகளின் ஆசிவேண்டி நின்றனர். அபய சேகர, திகிரிபண்டார, சுசநாக வீரப்பெரும் ஆதிய பௌத்த அறிஞர்கள் அவரைத் தரிசித்துச் சென்றனர். இராமகிருஷ்ண மடத்துத் தலைவராயிருந்த சுவாமி அசங்கானந்தா மகராஜ் தாம் தரிசித்த இரு மகத்தான ஞானியருள் யாழ்ப்பாணச் சோதியான யோக சுவாமிகள் ஒருவர் எனப் போற்றினார். கனேடியத் தூதுவராய்ப் பணிபுரிந்த கலாநிதி ஜோர்ஜ், சுவாமிகளைத் தமது ஆன்மீகக் குருவாகக் கொண்டு அடிக்கடி தரிசித்து மோனத்தேன் பருகிக் களித்தார். சோல்பரிப் பிரபுவின் புதல்வரான ராம்ஸ்போதம் என்பவர் சந்தசுவாமி எனும் நாமம் சூடி சுவாமிகளின் துறவுச் சீடருள் ஒருவராய்ச் சிவதொண்டு புரிந்தார். நீதியரசராயிருந்த அக்பர் பொதுக் கூட்டங்களுக்கு விருந்தினராய்ச் சென்று உரையாற்றிய போதெல்லாம் சுவாமிகளைப் பற்றிச் சில வசனங்களாதல் சொல்வதில் தவறாத சுவாமிபக்தராய் ஒழுகினார். ஸ்ரீகாந்தா போன்ற அரச அதிபர்கள் சுவாமிகளின் அடிப்பொடியாகப் பணி செய்தனர்.

ஆசிரியர்கள், வைத்தியர்கள் என்று அரச பணிபுரிந்தோரும், கமஞ்செய்தோரும், ஆச்சிமாரும், குழந்தைகளும் சுவாமிகளிடம் அன்பு பூண்டனர். குடிப் பழக்கத்தைவிட முடியாதோரும், கடத்தல் மன்னர்களும், நாத்திகரும் கூட சுவாமிகள் திருமுன்னிலையிலே பய பக்தியுடன் உடல் கோட்டி நின்றனர். தன்னில் எல்லோரையும் எல்லோரிலும் தன்னையும் காணும் பேரன்பாளர் ஒருவரிடம் எல்லோரும் அன்பு பூண்டிருத்தல் இயல்பன்றோ!

சுவாமிகள் தாம் திருவடிக்கலப்புறுவதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன் சிவதொண்டன் நிலையத்தை நிறுவினார். இதுபற்றிப் பின்னர் தம் அன்பர்களிடம் கூறியபோது தனக்குப் பின் தன்னை நம்பினோர் தட்டுக்கெட்டுப் போகாதிருத்தற்பொருட்டு இதனை நிறுவியதாகக் குறிப்பிட்டார். சிவதொண்டன் நிலையத்துக் குறிக்கோள் மௌனமாயிருந்து இளைப்பாறுதல். மாந்தர் வெய்ய புவிபார்த்து விழித்திருந்து துயரகல ஆறியிருக்கும் இணையடி நிழலாக இந்நிலையம் அமைந்திருக்கின்றது. இதன் பொருட்டே சுவாமிகள் 'திருவடி'யைப் பிரதிட்டை செய்தனர்.

மௌனமாகத் தியானத்தமர்ந்திருத்தற்கு ஏதுவான பூசனை முறையையும், எளிமையான விழாக்கள் சிலவற்றையும் நியமஞ் செய்தார். இத்தவச் சாலையிலே தன்னையறியத் தவமியற்றுவோருக்குத் தடையேதும் நிகழாதிருத்தற்பொருட்டு கண்டிப்பான நடைமுறைகள் சிலவற்றை ஏற்படுத்தினார். அவர் தம் திருவுளப்படி இந்த நடைமுறைகளைப் பேணுதற் பொருட்டிருக்கும் பொறுப்பாளர் கயிலைப்பதியிலிருக்கும் நந்தியம் பெருமானைப் போன்று பணி செய்தல் வேண்டும். இவ்வண்ணம் உன்னதமான குறிக்கோளையும், அக்குறிக்கோளை அடைதற்கான நியமங்களையும், இவற்றைப் பேணும் கண்டிப்பான நடைமுறைகளையும் ஏற்படுத்திய பின் தம்மைத் தரிசிக்கக் கொழும்புத்துறைக்கு வருவோரிடம் "இங்கு ஏன் வருகிறீர்கள் சிவதொண்டன் நிலையத்திற்குச் சென்று நன்றாக தியானஞ் செய்யுங்கள்" என்று கூறினார்.

யாழ்ப்பாணம் முழுவதற்கும் சோதிப் பிரகாசமளிக்கும் ஞானச்சுடர் விளக்காகச் சிவதொண்டன் நிலையம் ஒளிர்கிறது. இந்நிலையத்திலே கடந்த மூன்று நாட்களாக ஆச்சிரம வாழ்வு வாழ்ந்து நற்சிந்தனை முற்றோதல் புரிந்த அடியார்கள் இன்று (25.03. 2021) யோக சுவாமிகளின் ஐம்பத்தேழாவது குரு பூசையை அபிஷேக ஆராதனைகளுடனும் சிறப்புடனும் அனுட்டிக்கிறார்கள். சுவாமிகள் தியான மண்டபத்திலே திருவடியாக வீற்றிருக்கிறார். அவர் மண்ணாகச் செய்யும் இம்மண்ணுலகிலே பிறந்து வெய்ய புவிபார்த்து இளைத்துப் போயிருக்கும் எமக்கிரங்கி தியானமண்டபத்துப் படி வழியே இறங்கி வந்து புராணமண்டபத்தில் வீற்றிருந்து நம் பூசனை கொண்டு கற்பக தருவென வேண்டுவார் வேண்டுவதை அருள்வார். அவர் அருளார் அமுதம் வழங்குகின்றார் வந்து முந்துமினே.

**சிவதொண்டன் சபை**
**434,கே.கே.எஸ்.வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு அஞ்சுகிறது

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் அதன் பிரதிபலன் எவ்வாறு அமையும் என்பதை அறிந்துள்ளமையால் தான் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அஞ்சுகிறது. முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரப்பிரசாதம் வழங்கி 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள முடிந்த அரசாங்கத்தினால் மாகாணசபை தொடர்பான சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வது கடினமானதாக இருக்காது என பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

தற்போது மாகாணசபைகள் தொடர்பில் புதிய நாடகங்கள் அரங்கேற்றப் படுகின்றன. மாகாணசபைத் தேர்தலை காலம் தாழ்த்திக் கொண்டிருக்கின்ற குற்றச்சாட்டிலிருந்து அரசாங்கத்திற்கு மீள வேண்டியுள்ள போதிலும், தேர்தலை நடத்துவதற்கு அஞ்சுகின்றது. எனவே தான் நாம் தேர்தலை நடத்த தயாராகவே உள்ளோம்.

ஆனால் நல்லாட்சி அரசாங்கத்தில் உருவாக்கப்பட்ட சட்டத்தில் காணப்படுகின்ற சிக்கல்களால் அதனை நடத்த முடியாமலுள்ள என்று போலியான கருத்துக்கள் பரப்பப்படுகின்றன. அத்தோடு பௌத்த மதகுருமார்கள் ஊடாக மாகாண சபைகள் வேண்டாம் என்ற நிலைப்பாட்டையும் அரசாங்கமே தோற்றுவிக்கிறது. நம்பிக்கை , தைரியம் இருந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்திடம் சவால் விடுக்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி-4)

# 7 மில்லியன் "ஸ்புட்னிக் வி" கொள்வனவு செய்ய அனுமதி

(கொழும்பு)

ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை இலங்கையில் அவசர பயன்பாட்டுக்காக உபயோகிப்பதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய 7 மில்லியன் தடுப்பூசிகளை முதற்கட்டமாக கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொவிட்-19 வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக இலங்கையின் சனத்தொகையில் 14 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

அதன் ஆரம்பகட்டமாக 5 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு சுகாதார அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




அதற்கமைய ரஷ்யாவில் தயாரிக்கப்படும் ஸ்புட்னிக் வி தடுப்பூசியை இலங்கையில் அவசர பயன்பாட்டுக்காக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைய அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தை உடன்பாட்டுக்குழுவின் பரிந்துரைக்கமைய 7 மில்லியன் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கு சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி-4)

## மரம் விழுந்ததில்...

கும் கூலித் தொழிலாளி ஒருவர் மரம் அறுத்துக் கொண்டிருக்கும்போது மரம் அவர் மேல் விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின்போது முள்ளியவளை 03ஆம் வட்டாரத்தினை பிறப்பிடமாகவும் ஐயனார் குடியிருப்பு முள்ளியவளையினை வசிப்பிடமாகவும் கொண்ட சொக்கன் என்று அழைக்கப்படும் 42 வயதுடைய குடும்பஸ்தரான கணபதிப்பிள்ளை ஜெயசீலன் என்பவர் உயிரிழந்துள்ளார்.(ம-3)

## கிணற்றிலிருந்து...

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கரணவாய், அண்ணாசிலையடியைச் சேர்ந்த சின்னத்தம்பி சாமிவேல் (வயது-62) என்பவராவார்.

கடந்த திங்கட்கிழமை வீட்டில் இருந்தவர் அதிகாலை காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை தேடுதல் நடத்தியபோது வீட்டில் இருந்து சற்று தூரத்தில் உள்ள கிணற்றடியில் செருப்பு, சால்வை, சாரம் என்பன காணப்பட்டதையடுத்து கிணற்றில் பார்த்தபோது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1107
வெற்றி இலக்கங்கள்
தனுசு 1 3 7 0 1 0
மிதுனம் 16205

தன நிதானய
திகதி - 24/03/2021 சீட்டிழுப்பு இலக்கம் - 473
X 36 46 51 58
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
2 6 2 9
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 466 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 24.03.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2731
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Q 28 34 62 76
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/03/24
சீட்டிழுப்பு இலக்கம் 4436
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
R 6 9 5 7 3 8
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/03/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0798
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
J 18 05 52 53 59


## திருநெல்வேலி...

நல்லூர், திருநெல்வேலி பொதுச் சந்தைத் தொகுதியில் எழுமாறாக சிலரிடம் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதில் 24 பேருக்கு தொற்று உள்ளமை நேற்று புதன்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் மரக்கறி வியாபாரிகள் மற்றும் சந்தைத் தொகுதியில் உள்ள கடைகளின் வியாபாரிகளும் அடங்குகின்றனர். அதனால் திருநெல்வேலி பொதுச் சந்தை உள்ளிட்ட சந்தைத் தொகுதி முழுமையாக நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்படுகின்றது.

திருநெல்வேலி சந்தைத் தொகுதி வியாபாரிகள் மற்றும் அங்கு பணியாற்றுபவர்கள் தம்மை சுயதனிமைப்படுத்துமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

தமது விபரங்களை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரியிடம் அல்லது வடமாகாண சுகாதாரத் திணைக்களத்தின் 24 மணிநேர சேவையான 021 222 6666 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த ஒத்துழைப்பை வழங்குவதன் ஊடாக தமது உறவினர்களையும் பிரதேசத்தையும் கொரோனா தொற்று பரவலில் இருந்து பாதுகாக்க முடியும்" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

(ம-3,18,33)

## மன்னார் கரிசல்...

வாய்க்கிழமை மாலை உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கரிசல் புகையிரத பாதைக்கு சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காட்டுப் பகுதியில் குறித்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் மாடு தேடிச் சென்ற நபர் ஒருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை குறித்த சடலத்தை அவதானித்த நிலையில் குறித்த சடலம் தொடர்பாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

குறித்த தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற மன்னார் பொலிஸார் சடலத்தை அவதானித்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. குறித்த நபர் சுமார் 20 நாட்களுக்கு முன் உயிரிழந்திருக்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளதோடு, குறித்த சடலம் சிதைவடைந்து உருக்குலைந்த நிலையில் அடையாளம் காண முடியாதவாறு காணப்பட்டது. (ம-3)

## வவுனியாவில்...

குறித்த பகுதியில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த பகுதியில் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்ட பொலிஸார், இளைஞர் ஒருவரின் பயண பொதியினை சோதனையிட்டனர்.

இதன்போது பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 4 கிலோ 600 கிராம் எடையுடைய கேரள கஞ்சாவினை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ம-3,299)

## யாழ்.மாநகர...

மணிவண்ணனுடன் கடந்த வாரமளவில் தொடர்புடயவர்களை அடையாளப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நெல்லியடியில் கடந்த 20ஆம் திகதி நடைபெற்ற திருமணச் சடங்கில் கலந்து கொண்ட ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதியாகி உள்ள நிலையில், குறித்த திருமண வைபவத்தில் கலந்து கொண்டவர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் நேற்றைய தினம் காலை மாநகர சபை முதல்வரிடமும் பி.சி.ஆர் பரிசோதனைக்காக மாதிரிகள் பெறப்பட்டன. அவற்றின் முடிவில் முதல்வருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதியாகியுள்ளது.

மணிவண்ணனுடன் கடந்த ஒரு வாரமாக தொடர்புடையவர்களைத் தொடர்பு கொள்ளுமாறு சுகாதாரத்துறை கோரியுள்ளது. (ம-3,33)

## ஐ.நா தீர்மான...

மறைப்பதற்காகவே 11 நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்துக்கு "இல்லை" என வாக்களித்துள்ளன என்று முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கை மீதான ஐ.நா. தீர்மானம் குறித்து டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இப்போது இலங்கைக்கு 11 நண்பர்களே உள்ளனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ம-3)

## வடக்...

இதில் 44 பேருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வேலணை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் மண்டைதீவுக்கு கடலுணவு வாங்குவதற்காகச் சென்றவர். யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் 3 கைதிகளுக்கு கொரோனா தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மருத்துவபீட மாணவன் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கிளிநொச்சி பளையில் 4 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

வவுனியா பொது வைத்தியசாலையில் இரண்டு பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார்" என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(ம-3,18,33,250,299,316)

## கொரோன 3ஆம்...

கட்டுப்பாடுகள் பண்டிகை காலம் நெருங்கி வருவதால், மேலும் இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.பாலசூரிய தெரிவித்தார். (ம-3)

## வல்லரசுகள்...

றும்போது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். (ம-3)


NLB, DLB அதிர்ஷ்டங்கள்
ஒரு தினத்தில் மூன்று இலட்சங்கள்
ராசி அதிர்ஷ்டம் - இரண்டு இலட்சங்கள்
தன நிதானய - ஒரு இலட்சம்
கனகலிங்கம் திலகவதி முகவர் மூலம் வெல்லப்பட்டது.
இல.04, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(பிரதான முகவர் நிலையம்)
(6328)

சீட்டிழுப்பு வாரம் 063
சீட்டிழுப்பு திகதி 24.03.2021
வெற்றி இலக்கங்கள் 28 32 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,394,540
அபிவிருத்தி லொத்தர் சபை
நீலம், செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் முறையே புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1232
வர்ணம் : இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 24.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 121,144,345
வெற்றி இலக்கங்கள் 32 43 44 62
ஆங்கில எழுத்து C
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 3562
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 24.03.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,163,063
வெற்றி இலக்கங்கள் 17 30 34 39
ஆங்கில எழுத்து O
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 2,000,000/=
திகதி : 24.03.2021
வெற்றி வாரம் : 3113
வர்ணம் : பச்சை
வெற்றி இலக்கங்கள் 16 20 24 44
தனுசு
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,530,100

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1406
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 24/03/2021
தினம் புதன்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் Y 23 35 61 64
அடுத்த சுப்பர் ஜக்பொட் 50,604,296/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1744
சீட்டிழுப்பு திகதி 24.03.2021
வெற்றி இலக்கங்கள் 14 40 55 68
ஆங்கில எழுத்து I
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 23,459,880
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

**ENGLISH SPOKEN WITH GRAMMER**

**SATHAPONS**
Mali santhy, Alvai.

**MR. R. SANMUKASUNDARAM**
B.A(Eng. Medium), Eng. Spl. Trd. Teacher, Eng. Trd. Instructor.

*COMMENCE ON 27.03.2021 Saturday 6.30p.m*

021 226 3206, 077 309 5176, 077 925 0105 (C-1800)



**கணக்கீடு**

பிரத்தியேக வகுப்பு A/L 2023

ஆரம்பம் 28.03.2021 5.00 p.m

**S.தவா**

[ B.com (Hons) (Acc. spl.), PGDE, M.A in Education (Hons) ]

( A/L 2021, 2022 பிரிவுகளுக்கான வகுப்புகள் நடைபெறுகின்றன. )

உங்கள் நேரத்திற்கேற்ற வகுப்புகளுக்கு அழையுங்கள்.

☎-077 239 5858

இல.17, பிரம்படி ஒழுங்கை, கொக்குவில். (6331)



**D.C.M$_N$- யாழ். நகர்**

(யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அருகாமை)

**A/L 2023** கலை, வர்த்தக வகுப்புக்கள்

28.03.2021 ஞாயிற்றுக்கிழமை

காலை 8.00 மணி

**வர்த்தகப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்**

- பொருளியல் S. ஜெயக்குமார்
- கணக்கீடு S. தவா
- வணிகக் கல்வி N.S. கபில்

**கலைப் பிரிவு சிரேஷ்ட ஆசிரியர் குழாம்**

- தமிழ் - வழமையான முன்னணி ஆசிரியர்
- புவியியல் P.S.V. தினேஸ்
- இந்துநாகரிகம் T. ஸ்ரீஸ்
- அரசியல் பொன் சந்துரு
- வரலாறு S.S.Y. பிரதீபன்
- அளவையியல் T.T. நீதன்
- ஊடகக் கல்வி N. தீபன்
- ICT லவேந்திரன்
- நாடகமும் அரங்கியலும் M. ஐங்கரன்
- கிறிஸ்தவ நாகரிகம் J.J. வசந்தன்
- விவசாய விஞ்ஞானம் B. பாலசுதன்

D.C.M$_N$- நிர்வாகி 077 011 9434 (6330)


## இலங்கையின் பலவீனமே ஐ.நா தீர்மானத்துக்கு காரணம்

(கொழும்பு)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பிலான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமைக்கு இலங்கை அரசாங்கத்தின் பலவீனமே காரணம் என ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இந்த தீர்மானம் குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே ஐக்கிய மக்கள் சக்தி இதை குறிப்பிட்டுள்ளது.

மேலும் உரிய வெளிநாட்டுக்கொள்கை இல்லாமை, அரசாங்கம் மனித உரிமைகளை மீறுகின்றமை மற்றும் ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்காமையே இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குறிப்பிட்டுள்ளது. (ம-03)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பலாலி வீதி, கோண்டாவில் கொட்டைக்காடு வீதியில் 10 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(1 1/2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.)

பலாலி வீதியில் இருந்து 120 மீற்றர் தூரத்தில் காணி உள்ளது. (6334)

077 623 4204
077 505 8561
077 235 2656



**தரம் 5 மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள்**

பரீட்சைக்கு தயார்படுத்தும் பயிற்சி வகுப்புக்கள் ( Paper Class )

27.03.2021 சனி மாலை 6.00 மணி முதல் ஆரம்பம்.

ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும்.

தரம் 4 மாணவர்களுக்கும் பயிற்சிகள் நடைபெறும். (C-1800)

வளவாளர் திரு. M. சுபதீஸ்வரன் B.A, PGDE

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதி

**சதாபொன்ஸ்**

மாலி சந்தி, அல்வாய்.

021 226 3206, 077 925 0105, 077 309 5176



**கணினி, சிங்களம்**

O/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்.

- அடிப்படையிலிருந்து கற்பிக்கப்படும்.
- உங்களுக்கு விரும்பிய நேரத்தைத் தெரிவுசெய்து கற்க முடியும். (C-1799)

**New Sky Computer Training Centre**

இல.716, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

தொ.பே. 021 221 5992



**தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான நிலையம் ஒன்றிற்கு முன் அனுபவம் உள்ள (ஆண் / பெண்) காசாளர், சிட்டை எழுதுனர் மற்றும் சிற்றுண்டி பரிமாறுபவர் (supplier) பெண் ஊழியர்கள் தேவை. (6306)

**LINGAN CREAM HOUSE**

No. 213, Stanley Road, Jaffna.



**விரைவு பொதிகள் சேவை**

**V2 TRAVELS**

UK-1000/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

0768226240 DHL (C-1767)



**அன்னா** EXPRESS

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= (C-1768)

070 3305500
077 888 9388

976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை

பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை

மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)


# மரண அறிவித்தல்

## திருமதி பிரபாலினி வரதராஜன்

[ M.Ed, B.Ed (Primary), Primary Trained ]

(ஆசிரியர், பகுதித் தலைவர் - யா/ இந்து ஆரம்பப் பாடசாலை)



சாவகச்சேரி, மட்டுவில்லைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிரபாலினி வரதராஜன் கடந்த 21.03.2021 (ஞாயிற்றுக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவஞானம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - சேதுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் வரதராஜனின் அன்பு மனைவியும் உமையாளின் (மருத்துவபீட மாணவி - பங்களாதேஷ் ) அன்புத் தாயாரும் சுபாஸ்கரன் (பிரான்ஸ்), சுரேஸ்கரன் (நோர்வே), சுதேஸ்கரன் (ஆசிரியர் - யா/மீசாலை விக்னேஸ்வரா ம.வி.), சுபாலினி (ஆசிரிய ஆலோசகர் - வவு. வடக்கு வலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு, திலகவதி, ராஜலக்ஸ்மி, சாந்தநாயகி, கமலாம்பிகை (லண்டன்), புவனேஸ்வரி (ஆசிரியை - யா/ நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வி.), லதா (பிரான்ஸ்), திலகா (நோர்வே), தேவரதி (பிரதி அதிபர் - யா/ டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி), வசந்தகுமார் (தபாலகம் - வவுனியா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.03.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (இல. 138/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்) இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளிற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 138/1, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (C-1794)

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.